சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஸூ ஆவணி மீ 26 உ
(1889)

உ

பிரதி விலை: ரூபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்

சிவமயம்

(HINDU ORGAN)

புத்தகம்: 113

சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 12ம் நாள்
(26.05.2002) வைகாசிப் பூரணை

இதழ்: 2

## சிதம்பரம் புண்ணியநாச்சி அம்மையார் மடத்திற்கு நாற்பது இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஆனித்திங்கள் இரண்டாம் நாள்

# கட்டடத் திறப்பு விழா

## தமிழக - ஈழ வரலாற்றுப் பதிவொன்று ஒளிர்கிறது

**யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட சிதம்பரம் புண்ணியநாச்சி மடத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா ஆனித்திங்கள் இரண்டாம் நாள் (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் கோலாகலமாக நடைபெறவுள்ளது எனச் சிதம்பரத்திலிருந்து சபைப் பிரதிநிதி திரு. வி. இராமநாதன் அவர்களும் சபையின் மூத்த உறுப்பினரும் முன்னாட் செயலாளருமாகிய திரு.த. சண்முகலிங்கம் அவர்களும் அறியத் தந்துள்ளனர்.**

சிதம்பரம் மாலைகட்டித் தெரு இருபத்தெட்டாம் இலக்கத்தில் புண்ணியநாச்சி அம்மையார் திருமடம் அமைந்துள்ளது. புண்ணியநாச்சியம்மை தருமம் பற்றிய ஆதார பூர்வ தகவல்கள் அடங்கிய கட்டுரையொன்றை இந்துசாதனம் புத்தகம் 110 இதழ் 10 ( பிரமாதி தை இதழ்) இல் காணலாம். நாற்சார் வீட்டு வடிவில் அமைந்திருந்த பல தசாப்தங்கள் பழமை வாய்ந்த இம்மடக் கட்டடம் - தனது வாழ்காலத்தைத் தாண்டிய நிலையில் - மிகப் பழுதுற்றிருந்ததால் கடந்த பல வருடங்களாக ஈழத்திலிருந்து சிதம்பரம் செல்வோர் இம்மடத்தில் தங்கிச் செல்ல முடியாதிருந்தது. ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகிய உற்சவ காலங்களில் மட்டும் அன்னம் பாலிப்பு நடைபெற்று வந்தது.

புண்ணியநாச்சி மடத்தை இக்காலத்திற்கேற்ற வசதிகளுடன் புதிதாக மீள அமைக்கப்பட வேண்டிய தேவை பலராலும் பலவருடகாலமாக உணரப்பட்ட

(09ம் பக்கம் பார்க்க)

### குருஞான வள்ளலாய்க் காக்கும் திரு

பெருஞானப் பாலுண்டு பேராயிரங் கொள்ளும் பிஞ்ஞகனின்
ஒரு ஞானப் பிள்ளையாய்க் கோள் நீக்கி நோய் நீக்கி ஓதரிய
குருஞான வள்ளலாய்க் காக்கும் திருவாய்க் குணம் பெருக்கும்
திருஞான சம்பந்த மூர்த்தி நற் பாதம் என் சென்னியதே

**திருஞானசம்பந்தர் குருபூசை:**
**வைகாசி மூலம் 28.05.2002 செவ்வாய்க்கிழமை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேசுர வடிவங்கள்

(புத்தகம் 112, இதழ் 12இன் தொடர்ச்சி)

## 4. சபாபதி:

இறைவனின் ஐந்தொழில் எமக்கு உணர்த்தி நிற்கும் தாண்டவ மூர்த்தமாகிய நடராஜர் மூர்த்தம் மிகவும் பிரபல்யமானது. சிதம்பர சபையிலே தாண்டவமாடுவதால் சபாபதி என இம்மூர்த்தம் அழைக்கப்படுகின்றது. நடராஜ மூர்த்தத்தின் உருவ அமைப்பு யாவரும் அறிந்ததே. இந்துசாதனம் புத்தகம் 112 இதழ் 2 (விஷு வைகாசி இதழ்) இல் பிரசுரமான **தாண்டவ தத்துவம்** என்ற கட்டுரை, புத்தகம் 112 இதழ் 9 (விஷு மார்கழி இதழ்) இல் வெளியான **ஆனந்தத் தாண்டவம்** என்ற கட்டுரை போன்றவற்றில் நடராஜ மூர்த்த அமைப்பு, தத்துவம் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

## 5. கல்யாண சுந்தரேசர்

தக்ஷன் மகளாக - தாக்ஷாயணி என்ற பெயரோடு - அவதரித்த பார்வதி தேவியார், தன் கணவரும் பரம் பொருளுமான சிவபெருமானைத் தமது தந்தையாகிய தக்ஷன் மதியாத காரணத்தால் அவமானமுற்று, தமது தந்தை செய்த யாகத்தின் குண்டத்திலேயே விழுந்து மறைகின்றாள். திரும்பவும் ஒரு உரு எடுத்து இறைவனை அடைய வேண்டும் எனப் பிரார்த்தித்ததன் பயனாக இமவான் மகளாகிய - உமை என்ற நாமத்தோடு வளர்கிறாள். இறைவனை மீண்டும் கணவனாக அடையக் கடும் தவம் இயற்றுகின்றாள். அம்மையின் கடுந்தவம் கண்டு இரங்கிய இறைவர், அவளது தீவிர பக்தியைத் தாமே நேரடியாகப் பரிசோதித்த பின், அவளைத் தனது பத்தினியாக ஏற்றுக்கொள்ள இணங்குகிறார். சப்த ரிஷிகள் இமவானிடம் பேசித் திருமணத்தை நிச்சயிக்கின்றனர். சிவன் - உமை திருமணம் இமாசலத்தில் நிறைவேறுகிறது. இவ்வாறு இமய மலையில் நடைபெற்ற சிவன் - பார்வதி கல்யாணத் திருக்கோலமே **கல்யாணசுந்தர மூர்த்தம்** அல்லது **வைவாஹிக மூர்த்தம்** என அழைக்கப்படுகின்றது.

கல்யாணசுந்தர மூர்த்த திருவுருவ அமைப்பு உத்தரகாமிகாகமத்திலும் பூர்வகரணாகமத்திலும் விபரிக்கப்பட்டுள்ளன. கஸ்யப சில்பம், சில்ப சங்கிரஹம், சில்ப ரத்தினம், மாயா மதம் முதலிய சிற்ப சாஸ்திரங்களும் கல்யாணசுந்தர மூர்த்த அமைப்பை விளக்குகின்றன.

கல்யாணசுந்தர மூர்த்தத்தில் சிவனுக்கு **வலப்பக்கத்தே** பார்வதி தேவியார் நிற்பதாக உருவமைக்கப்பட்டிருக்கும், ஏனெனில் எமது சமயப் பாரம்பரியப்படி திருமணத்தின் போது மணமகள் மணமகனின் வலது பக்கத்தேயே இருத்தல் வேண்டும். பார்வதிதேவி காலும் உடலும் இடையும் கழுத்தும் துவள ஒய்யாரமான ஒயிலுடன் மணமகளுக்குரிய நாணம் முகத்தில் தவழ நாணிக் கோணித் தனது வலது கையைச் சிவனது வலதுகை பற்றியிருக்கக் கூடியதாக நீட்டியவாறு நிற்பள். இடது கையில் கண்ணாடி ஒன்றை வைத்திருப்பள் (மலர் போன்ற வேறு பொருள்களையும் வைத்திருக்கலாம்.)

நான்கு கைகளுடன் கூடிய சிவன் திரிபங்க நிலையில் காட்சி தருவார். (குறிப்பு: அழகுக்கு அடையாளமாக உடம்பானது மூன்றிடங்களில் (கால்,இடை, கழுத்து) வளைந்த வண்ணம் இருக்கும் நிலை திரிபங்க நிலை எனப்படும். உடம்பை வளைக்காது நேராக நிற்கும் நிலை சமபங்க நிலை எனப்படும்). சிவனது தலையில் சடாபார மிருக்கும். வலது மேற்கையில் மழுவையும் இடது மேற்கையில் மானையும் தாங்கி நிற்பர். கீழ் வலதுகை பார்வதிதேவியின் வலக்கரத்தைப் பற்றி நிற்கும். கீழ் இடக்கை அபயகரமாக விளங்கும்.

சுதை வேலைப்பாடாக அமைந்த கல்யாணசுந்தர மூர்த்த வடிவமைப்புகளில் மேற்குறித்த வடிவமைப்பிலமைந்த சிவனதும் உமையினதும் தோற்றத்துடன் விஷ்ணுவும் இலட்சுமியும் பார்வதியைச் சிவனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பது போன்றும் பிரம்மா ஓம அக்கினிக்கு முன் இருந்து மணச்சடங்கை நிறைவேற்றுவது போலவும் திக்கு பாலகர்கள், வித்தியாதரர்கள், கந்தருவர்கள் முதலியோர் ஆகாயத்திலிருந்து திருமணத்தைக் கண்டு களிப்பது போலவும் சிவகணங்கள் வணங்கி நிற்பது போலவும் விஷ்ணு, இலட்சுமி, பிரம்மா, சிவகணங்கள், திக்குபாலகர்கள், வித்தியாதரர்கள், கந்தர்வர்கள் ஆகியோரது உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்தத் திருமணக் கோலத்தினை சமநிலைகாத்த அகத்தியருக்கு - அவர் விரும்பிய வண்ணம்

**(06ம் பக்கம் பார்க்க)**

## பட்டமளிப்பு – பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வருடாந்தப் பட்டமளிப்பும் பரிசளிப்பு விழாவும் இன்று (26.05.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபை உபதலைவர் சைவபூஷணம் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விஷேட பூசையைத் தொடர்ந்து சைவ பரிபாலன சபை பண்ணிசை வகுப்பு மாணவர்கள், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள், வண்ணை நாவலர் மகா வித்தியாலய மாணவர்கள் திருமுறை ஓதினார்கள். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் சுவாமிகளின் அருளுரையும் தலைமையுரையும் செல்வன் குமாரவடிவேல் குருபரன் அவர்களின் பேச்சும் இடம்பெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் உரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரால் பட்டமளித்தலும் பரிசளிப்பும் செய்யப்பட்டது. சபையினரால் 2001 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சைவசித்தாந்த, பிரவேச, பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களுக்கு பட்டங்களையும் 2001ஆம் ஆண்டில் சபையினரால் தரம் இரண்டு முதல் பன்னிரண்டு வரை நடத்தப்பட்ட சைவநெறித்தேர்வில் பரிசுக்குரியவர் களுக்கான பரிசில்களையும் பிரதம விருந்தினர் வழங்கினார். கலந்துகொண்டோருக்கு மதிய உணவு வழங்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேன்மைகொள் சைவநீதி"

-குமாரவடிவேல் குருபரன் -

**(26.05.2002 ஆம் திகதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற சைவபரிபாலனசபையாரின் பட்டமளிப்பு, பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரையின் தொகுப்பு)**

சமய உணர்வு தொடர்பான வரலாற்றினை ஆராயும் ஒருவர் அது நீண்டதும் சிக்கலானதுமான ஒன்றாக அமைவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். மேலும் தெளிவாகக் கூறுவதாயின் மனிதனின் தோற்ற காலம் தொடங்கியே இவ்வுணர்வு மாந்தரிடையே நிலவி வந்தது எனலாம். ஆதி மனிதன், தான் ஆற்ற வேண்டிய கருமங்கள் சில ஈடேறுவதற்கு (உதாரணமாக வேட்டையில் விலங்கு அகப்படும் நிகழ்தகவு, வயலிற்கு நீர் கிடைக்கும் நிகழ்தகவு போன்றவை) தமது சக்திக்கு உட்படாத சில காரணிகளில் தங்கியிருப்பதை உணர்ந்தான். இதன் விளைவே இயற்கை வழிபாட்டு முறைமை. காலச் சக்கரத்தின் ஓட்டத்தில் மனிதனின் நாகரிக மயப்பட்ட, தத்துவார்த்த சிந்தனையின் வெளிப்பாடாக ஓர் நெறிப்படுத்தப்பட்ட- ஒழுங்கு படுத்தப்பட்ட - சமய நெறியினைப் பின்பற்ற முற்பட்டான்.

இவ்வாறாகத் தோன்றிய சமயங்களை சமய ஒப்பீடு தொடர்பான ஆய்வாளர்கள் இரண்டாகப் பிரித்து நோக்குவர்.இவற்றுள் முதலாவது வகை, தாம் அடிப்படையாகக் கொள்ளும் ஒழுக்கநெறியை உணர்த்தியவன் தம் சமயத்தை நிறுவிய மெய்யுணர்ந்த ஆசிரியனே எனக்கொள்ளும் சமயங்கள். இரண்டாவதுவகை, அவ்வொழுக்க நெறியை உணர்த்திய ஆசிரியர்க்கு முதற்கண் உணர்த்தினவன், உலக முதற்பொருளாக விளங்கும் இறைவனே எனக்கொள்ளும் சமயங்கள். இவற்றுள் முதலாவது வகையைச் சேர்ந்த சமயங்களின் தலைவர்கள் உலக முதல்வனைப் பற்றிக் கூறாமையினால், அவை கூறும் நெறி முறைகள் தனிமனிதனுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பைப் பற்றியே பேசுந்தன்மை கொண்டவை. உலக முதல்வனைப் பற்றியோ ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் உயிரைப் பற்றியோ பேசுவதில்லை. இரண்டாவது வகையைச் சேர்ந்த சமயங்கள் உயிரின் பாசபந்தங்கள், வாழ்க்கை நிலையாமை, உயிர் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய ஒழுக்க நெறிகள், இறைவன் உயிரின் பாச பந்தத்தை அறுத்து நிலையின்பம் (முக்தி) வழங்கல் பற்றிப் பேசும்.(க. வச்சிரவேலு முதலியார்: சைவ சித்தாந்தமும் சிவாலயங்களும் திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகமலர், 1970). இவ்விருவகைச் சமயங்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து இரண்டாவதுவகை மேலோங்குதலை, உயிர்க்கு ஒழுக்கநெறிகளைப் போதிக்கும் சிறப்புநோக்கி, உய்த்தறியலாம். இவ்வகைச் சமயங்களில் பழமையானதும் தெளிவான சித்தாந்தத்தைத் தன்னகத்தே கொண்டு இலங்குவதும் சைவசமயம் ஒன்றேயாகும்.

சமயம் என்பது ஓர் வாழ்க்கை நெறியாய் அமைதல் வேண்டும். அதாவது மக்களின் வாழ்க்கை ஒழுங்கு நெறிகளைப் பற்றிப் பேசுதல் வேண்டும். இவ் அடிப்படையில் நோக்கும் போது முதலாவது வகைச் சமயங்கள் உயிரைப் பற்றிப் பேசாமையினால் அவற்றை ஓர் வாழ்க்கை நெறியாகக் கொள்ளுதல் ஒவ்வாது. இரண்டாவது வகைச் சமயங்களில் மேன்மை பொருந்தியதான சைவநெறி உயிர்பற்றிய தெளிவான சிந்தனைகளைக் கொண்டிருப்பதனால் அது மக்களுக்கு ஒப்புயர்வு அற்றதோர் வாழ்க்கை நெறியாக அமைகின்றது.

சமயம், சமூகம் எனும் பதங்கள் இரண்டாகப் பிரித்து நோக்க முடியாதவை, அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. ஒரு சமூகமானது குறிப்பிட்ட சில ஒழுக்கவரைமுறைகளுக்குள் இயங்குகின்றது. இவ்வொழுக்க அறநெறிகளே அச்சமூகத்தின் நீதி முறைமை ஆகின்றன. இவ்வொழுக்க நெறிகளை சமூகத்திற்கு வழங்குபவை சமயங்கள். அந்தவகையிலே சைவசமயம் சுட்டும் ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் தோன்றிய நீதி சைவநீதியாகப் பரிணமிக்கின்றது. சமயங்களில் தலையாயது சைவ சமயம் என்றாற் போல் நீதிகளுள் மேன்மை பொருந்திய நீதியாக விளங்குவது சைவநீதியே.

சைவநீதி இறைவனது பேரருளைப் பெறுவதற்கு இரு முக்கிய நெறிமுறைகளை முன் வைக்கின்றது. அவை அறநெறி, இறையன்பு ஆகிய இரண்டுமாம். அவற்றை நாம் சிறிது விரிவாக நோக்குவோம்.

### அறநெறி

சமூகமும் சமயமும் ஒன்றிணைந்தவை என்றும் அவை பிரித்தறிய முடியாதவை என்றும் முன்னர் கூறினோம். நல்லொழுக்கங்களைப் பேணும் உயிர்களைக் கொண்ட சமூகமே உயர்வான சமூகம். அந்நல்லொழுக்க நெறிகள் பற்றிய முழுமையான விளக்கத்தையும் அதனது தாற்பரியங்களையும் சைவநீதி ஒன்றே தெளிவுறச் சுட்டி நிற்கின்றது. இந்நல்லொழுக்கங்களின் தொகுப்பையே அறம் என்கிறோம். சைவத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கைநெறி அறம் சார்ந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டது என்பது சட்டவியலாளரது கருத்து. அவ்வாறானதானவொரு சமூகத்தில் நெறிமுறைப்படுத்தப்பட்டவொரு சட்டவரைவுக்கான தேவை எழவேண்டிய அவசியம் இருக்கவில்லை. சைவாகமங்களும் திருமுறைகளும் இதர நல்வழி நூல்களும் செய்யத் தகுந்தவை எவை செய்யத்தகாதவை எவை எனத் தெளிவுறச் சைவர்களுக்குப் போதிப்பதாலும் அவற்றை நெறிமுறை தவறாது சைவர்கள் பேணியமையாலும் சமூகம் கட்டுக்கோப்பான ஒன்றாக விளங்கிற்று. செய்யத் தகுந்தவையை **"புண்ணியம்"** என்றும் செய்யத்தகாதவையைப் **"பாவம்"** என்றும் சைவம் வரைவிலக்கணப்படுத்தியமை மேற்கூறிய கருத்திற்கு வலிமை சேர்ப்பதாக அமைகின்றது.

அறத்தைப் போதிப்பதில் திருமுறைகளும் சிவாகமங்களும் முன்னிலை வகித்து அதில் வெற்றியும் கண்டன. இவ்விரண்டையும் தவிர மற்றைய அறப்போதனை நூல்களுள் தலையாயதாகக் கொள்ளப்படக் கூடியது வள்ளுவநாயனாரின் ஓங்கு புகழ் திருக்குறள் எனும் அற்புத நூல். ஔவையார் போன்ற சங்ககாலப் புலவர்களும் அறத்தைத் தமது பாடுபொருளாகக் கொண்டிருந்தனர். மொத்தமாகக் கூறுவதாயின், சைவசமய புரவலர்களும் குரவர்களும் தமக்குக் கிடைத்த சாதனங்கள் மூலம்

(4ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேன்மைகொள் சைவநீதி"

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அறத்தைப் போதித்தனர். சில உதாரணங்கள் மூலம் இதனை விளக்க முற்படுகின்றோம்.

ஞானசம்பந்தப் பெருமான் திருவிராமேஸ்வரத்திலிருந்து திருக் கேதீஸ்வரப் பெருமானை நினைந் துருகிப் பாடுகையில் கயிலையங் கிரிநாதரான சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தி வடிவம் கொண்டு சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் எனும் நான்கு முனிபுங்கவர்களுக்கு அறத்தைப் போதித்ததாகக் குறிப்பிடுகின்றார். "பண்டு நால்வருக்கறமுரைத்தருளி" எனும் பாடல்வரியின் மூலம் நாம் இதனை உணர்கின்றோம். மற்று மோர் இடத்தில் சம்பந்தர்,

"நீதி பேணுவீர் ஆதி அன்னியூர்ச்
சோதி நாமமே ஓதி உய்ம்மினே"

என அடியார்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

சான்றோர்கள் தம்மால் ஒரு செயலைச் செய்ய முடியவில்லை என்று தம்மை நொந்து கொள்வதன் மூலம் அச்செயலின் மேன்மையைப் பிறருக்கு உணர்த்துவர். இவ்வணுகுமுறையை சைவசமய குரவர்களும் கடைப்பிடித்தனர்.

"நீதியால் வாழ்கிலை, நாள் செலா
நின்றன, நித்த நோய்கள் வாதியா, ஆதலால்
நாளு நாள் இன்பமே மருவினாயே"

எனச் சம்பந்தப்பெருமானும்

"நீதியால் வாழ மாட்டேன் நித்தலும் தூயேனல்லேன்
ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே உன் தூமலர்ப் பாதம் காண்பான்
ஆதியே அலர்ந்து போனேன் அதிகை வீரட்டனாரே"

என அப்பர் அடிகளும் தம்மை நொந்து கொள்வதன் மூலம் நீதிவழி வாழவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். திருமூலர் "தவமொழி" எனப் போற்றப்படும் தமது திருமந்திரத்தின் முதலாவது தந்திரத்திலேயே சைவ அறநெறிக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளித்து முந்நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களில் இவற்றினை விளக்கி அருளியுள்ளார். மேலே குறிப்பிடாத மற்றைய திருமுறைகளிலும் இக் கருத்துக்கள் பரவலாக செறிந்து காணப்படுகின்ற போதிலும் விரிவஞ்சி விடுத்தனம்.

"திருவள்ளுவ நாயனார் பேசாத பொருளும் உண்டோ?" என்பார்கள். 1330 குறளாலே உலகை அளந்த பெருமை வள்ளுவரையே சாரும். வீடுபேற்றைப் பற்றி வள்ளுவர் பேசியதாகத் தெரியவில்லையே என்பார்கள். அறம், பொருள், இன்பம், எனும் மூன்றையும் அறநெறிப் படி ஈட்டுவோமேயானால் விடுபேற்றை அடையலாம் என வள்ளுவர் கருதினார் போலும். அதனாலேயே தனது நூலை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றாகப்பிரித்துத் தந்தார் எனக் கருதலாம். திருவள்ளுவர் காட்டும் அறநெறி சைவநீதி காட்டும் அறநெறியின் பாற்பட்டவையே. பிறமதத்தார் திருவள்ளுவர் தம் சமயத்தவர் என எவ்வளவுதான் வாதிட முனைந்தாலும் அவரது குறளிலே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அடிநாதமாக நின்று ஒலிக்கின்றன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

அறவழி நிற்றலின் முக்கியத் துவத்தை வலியுறுத்தும் வள்ளுவர்,

"அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது"

என்கிறார். இங்கே 'பிறவாழி' எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவது அறம் தவிர்ந்த மற்றையதான பொருள், இன்பம் எனும் இரண்டும் எனப் பரிமேலழகர் கூறுவார். ஆகவே அறக்கடலாகிய இறைவனின் தாள் சேர்ந்தாரே-அதாவது அறவழி நின்று இறைவனைத் தொழுவோரே -பொருட்கடல், இன்பக் கடல் என்ப வற்றோடு பின்னிப் பிணைந்த வாழ்க்கைக் கடலை நீந்திக் கடக்க முடியும் என்பது திருவள்ளுவர் வாக்காகின்றது.

அறவழி நிற்றலே இறைவனின் அருட் பார்வைக்கிடந்தரும் எனக்குறிப்பிடும் திருவள்ளுவர் அறவழி நிற்றல் எங்ஙனம் எனக் கூறாமல் விடுவாரா?

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என்ற குறள்கள் மூலம் அறத்துக்கு வரைவிலக்கணம் தருகின்றார். மனதிலே குற்றமில்லாது - மாசில்லாது - இருத்தலே அறம். என்கிறது முதற்குறள். பொறாமை, ஆசை,சினம், கடுஞ்சொல் இல்லாத் தன்மையே அறம் என்கின்றது இரண்டாவது குறள். வள்ளுவரது சொல்லிற்கு மேல்வேண்டுவனவோ அறத்திற்கு பொருள்?

சமூகம் என்று நாம் பேச முற்படும் போது அதற்கு ஓர் தலைமைத்துவம் இருத்தல் வேண்டும். அந்தத்தலைமையானது சமூகத்தை ஆள்வதற்கு ஓர் ஆட்சி முறைத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆட்சிமுறைத் தத்துவங்கள் மாறுபாடடையலாம். ஆனால் ஆட்சித் தலைவன் அல்லது குழு நாட்டை ஆளவேண்டிய ஒழுங்கு நெறிமுறை மாற்றமடையுமா? அது கடந்த காலமாயினும் நிகழ்காலமாயினும் எதிர்காலமாயினும் மாறுபாடடையாது ஒன்றெனவே விளங்கும். அன்றைய சமூகத்தில் நிலவியது முடியாட்சி முறைமை. இன்றைய சமூகத்தில் நிலவுவது எனக் கூறப்படுவது குடியாட்சி முறைமை. இவ்விரண்டு முறை வழிவந்த ஆட்சித் தலைவரோ குழுவோ நாட்டையாள வேண்டிய நெறிமுறைகள், சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டிய நெறிமுறைகள், குடிமக்கள் நன்மை கருதிச் செய்யப்பட வேண்டியன என்பவற்றில் ஒரு முறையையே பின்பற்றுகின்றனர். சைவம் போற்றும் நூல்கள் இவை கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளை மிகத்தெளிவாகச் சுட்டி நிற்கின்றன. இவற்றில் எத்தனையோ அற்புதக் கருத்துக் களஞ்சியங்கள் நிறைந்திருக்கின்றன. அவை இன்னும் மக்களுக்கு வெளிக்கொணரப் படாமை எமது துரதிட்டமே.

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களுள் நீதியாட்சிக்குப் பெரிதும் புகழ்துரைக்கப்படுபவர்கள் புலிக்கொடிச் சோழர்களாவர். இத்தகைய புகழ்மிக்க சோழ பரம்பரையில் குன்றாமணி விளக்காய் பிரகாசித்து ஒளிர்பவன் மனுநீதிச்சோழன். அவனது பெயருக்கேற்றாற்போல் அவன் நீதி அமைந்திருந்தது. இவ்வாறு தனது காரணப்பெயரையே இயல்புப் பெயராகக் கொண்ட இம்மன்னனுக்கு "சிவமுயன்றடையும் தெய்வக் கலை பல திருந்த ஓதிக் கவனவாம் புரவி யானை தேர்ப்படைத் தொழில்கள் கற்று பவமுயன்றதும் பேறே எனவரும் பண்பின் மிக்க " ஓர் திருக்குமாரன் வாய்க்கப் பெற்றிருந்தான். தனது திருக்குமாரன்

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலன சபை
# தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 20

(புத்தகம் 113, இதழ் 1 இன் தொடர்ச்சி)

சுவாமிகளின் பிரசாரத்தினால் தங்கள் ஏகபோக நிலைக்கு ஆபத்து ஏற்படுவதைக் கண்ட கிறிஸ்தவ பாதிரிமார்கள் சுவாமிகளது பேச்சுக் களைத் தாக்கி மிகமோசமான முறையில் தமது பத்திரிகைகளில் செய்திகள், விமர்சனங்கள் வெளியிட்டனர். விவேகானந்தர் வேதாந்தி. யாழ்ப்பாணத்தவர்கள் சித்தாந்திகள். ஆகவே பாதிரிமார்கள் வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள வேறுபாடுகளை மிகைபடக்கூறி இந்துக்களுக்குள்ளே மித்திரபேதம் செய்ய - பகைமையைத் தூண்ட - பிரயத்தனங்கள் மேற்கொண்டனர். கிறிஸ்தவர்களின் கண்டனங்களை மறுத்து இந்துசாதனம் பத்திராசிரியர் 17.02.1897ஆம் திகதிய இந்துசாதனம் பத்திரிகையில் எழுதியவற்றைக் கீழே மறுபிரசுரம் செய்கிறோம்:

### ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளும் கிறிஸ்தவர்களும்

ஆயிரஞ் சுணங்கன்கள் கூடிச் சந்திரனைப் பார்த்துக் குரைத்துக் குரைத்து ஊளையிட்டாலும் அதற்கு யாதும் குறைவுண்டாகுமா? ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்மீது எண்ணிறந்த கிறிஸ்தவர் சீறிச்சினந்து அவர்க்கும் அவர் பிரசங்கிக்கும் மார்க்கத்திற்கும் விரோதமாகப் போலிக் கண்டனங்கள் எழுதித் தங்கள் பத்திரிகைகளை நிரப்பிவிடுவதால் அவர் மாட்சிக்கு இம்மியளவேனுந் தாழ்ச்சியுண்டாகுமா? உண்டாகா! உண்டாகா!! சுவாமியவர்கள் மேலைத் தேசங்களில் எமது மார்க்கத்தைப் பிரசங்கித்து அதனைக் கிரிதீபம் போல விளங்க வைத்து அதிகண்ணியமுற்றுத் திரும்பினரென்பது ஒருவாற்றானும் மறுக்கப்படக்கூடாத ஓர் சத்தியமே. இவ்வுண்மையை மறைக்க நினைத்தல் முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைக்க எத்தனித்தாற் போன்றிருக்கும்.

சுவாமியவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா ஆதியாமிடங்களிலே எமது மார்க்கத்தைப் பிரசங்கித்து அங்குள்ள அநேகரை எமது மத அனுசாரிகளாக்கினாரென்று நாம் கூற, அதனை மறுத்து, அங்ஙனமன்று வினோதக் காட்சிப் பிரியரானயுள்ளளோர் சிலர் மாத்திரமே அவர் பிரசங்கத்தைக் கேட்டுப் போயின'ரென்று எம்மோடு வாதாடின கிறிஸ்தவர்கள், அவர் தமது ஆங்கில சீடரோடும் நம் மத்தியில் வந்துதித்து, துயின்றிருந்த எம்மை விழிக்கச்செய்து ஓர் பெருங் கிளர்ச்சியை எம் மதத்தினர்க்குள் உண்டாக்கிச் சென்றதைக் கண்ணுற்று மனம் பொறுக்கலாற்றா தவராய்க் கிறிஸ்து மதத்திற்கு இடையூறு நேரிட்டிருக்கின்றதே எனும் அச்சம் காரணமாய் தம் பத்திரிகைகள் மூலம் ஆகச் சில வெற்றுரைகள் பகர்ந்து எம் நாட்டினரை இதுவரையும் வஞ்சித்தது போதாதென்றாக்கும் இன்னும் வஞ்சிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்.

...................... பத்திராதிபர் இந்துக்களாகிய எமக்கு இந்து மதம் போதிக்கத் துணிந்த துணிபே துணிபு! வேதாந்தம் சித்தாந்தங்கட்கிடையேயுள்ள பேதாபேதங்களை ஏதோ நன்குணர்ந்தவர் போன்று நடிக்கும் நடிப்பே நடிப்பு! தாம் கைக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ மதத்தினது உண்மை பொய் தெரியாது மயங்குமிவர் பரசமய ஆராய்ச்சி செய்ய நினைத்த மருளே மருள்! "பிரமவித்தியா", ''விவேக திவாகரன்" ஆதிய இந்தியப் பத்திரிகைகளில் அத்துவைத விஷயமாய் ஆங்காங்கு பலமுறைகளிலும் எழுதப்பட்டவற்றையெல்லாம் திரட்டி எடுத்துச் சென்று .................. பிரசுரித்துவிட்டு, தாம் ஏதோ அத்துவைத நூல்களை விசாரித்துக் கரை கண்டார் ஒருவர் போலக் கபட நாடகஞ் செய்யும் நாடகமே நாடகம்! இவர் இங்ஙனம் செய்தல் முந்திய பத்திராதிபரிலும் தாம் வெகுதீரனென்று காட்டவோ? அன்றி இவர் மந்தையிலுள்ள குட்டிகளெல்லாம் தம்மை மகா பண்டிதர், மகாவித்துவானென்று சொல்லித் திரியட்டுமென்றோ! அன்றி எமக்குள்ளே பிரிவினையுண்டாக்கிச் சுவாமிகள் வரவாற் கிளர்ந்திருக்கும் மதாபிமானத்தைக் கெடுத்துவிடுவதற்கோ! ஏதுக்கிவர் இவ்வளவு பதை பதைக்கின்றார்? இவர் வெற்றுரையால் எடுபட எமது சமயிகள் அத்தனை மூடசிரோன் மணிகளன்று. வேதாந்த சித்தாந்தங்களை உண்மை ஞானிகள் ஒருபோதும் இரண்டெனார். சுத்தாத்துவிதமே சித்தாந்தம் என்பது எமக்கெல்லாம் ஒத்த துணிபு. ஆகவே வேதாந்த சித்தாந்தங்கள் உண்மையளவில் ஒன்றேயாம். கிரியா விஷயங்களில் இவையிரண்டிற்கும் சிறிது பேதமுண்டேயாயினும் அதனால் உண்மை பேதிக்குமா? மாயாவாதத்துக்கும் சித்தாந்தத்துக்கும் மிக்க பேதமுண்டு. இவ்வுண்மைகளை அறியாது பத்திராதிபர் தாமே மயங்குகின்றாரன்றிப் பேதைகளை மயக்கவும் எத்தனிக்கின்றார். இவர் இங்ஙனம் எத்தனிக்கமுன் இவ்விஷயங்களைப்பற்றி நன்றாய் ஆராய்ச்சி செய்வாராயின் மிக நலமாயிருக்கும்.

### சிவபுண்ணியத் தெளிவு

சீவனை சிவத்தினொன்றாய்ச் சேர்க்கும்
சித்தாந்தத்தோர்க்கும்
சீவனை பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத்தோர்க்கும்
பாவனை இரண்டுமொன்றே பரம
ஞானத்தோர்க்கெல்லாம்
மேவிய கருமகாண்டம் விளம்பிடிற்
பேதமாமே.

சுவாமியவர்களுடைய பிரசங்கங்களிலே சிவபுண்ணியத் தெளிவுடையார் கருத்தே மிகுதியும் செறிந்து கிடத்தலைப் பலரும் இனிது விளங்கிக்கொள்வர்.

இன்னும் இப்பத்திராதிபரும் வேறு சிலரும் சுவாமிகளது பேர், ஊர், மரபு முதலியவற்றைச் சொல்லிக்களிக்கின்றனர். சுவாமியவர்களை நாம் மனிதரல்லர் என்று சொன்னோமா? அன்றி அவர் தாம் அப்படிச் சொன்னாரா? வேறு தொழில்களிற் செல்லப் போதிய திறமையும், பொருளும், வசதியுமில்லாது சீவனோபாயத்தின் நிமித்தம் குருப்பட்டம் தரித்து, வேதனம் பெற்று, பெண்டு பிள்ளையாதியரோடு சுகித்து வாழும் போலிக் குருமாரைப் போன்றிராது, நல்ல குடியிற் பிறந்து லௌகீக அனுகூலத்திற்கு வேண்டிய இலட்சணங்களையெல்லாம் பொருந்தியுள்ளாராயிருந்தும் அச்சுகானுபவத்தைக் கருதாது இளமையிலேயே உள்ளத்துறவு பூண்ட சுவாமிகளது பெருமை எத்துணை மாட்சியுடையது என்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

இங்கிலாந்து அமெரிக்கா முதலிய மேலைத் தேசங்களில் கிறிஸ்தவமத விசுவாசம் வரவரக் குறைந்து போகின்றதென்பதும். இப்புண்ணிய பூமியாகிய பரத

(12ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேசுர வடிவங்கள்

(02ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னாட்டில் காண வாக்களிக்கப் படுகிறது. இதனைத் திரிகூட ராஜப்பக் கவிராயர் தமது குற்றாலத் தல புராணத்திலே,

“மடப் பாவைக்கு அருள் புரிந்து
வலப்பால் வைத்து, மலர்வேதன்
சடங்கு இயற்ற, உந்தி பூத்தோன்
கடப்பாலில் புனல் வார்ப்ப
கருணை மூர்த்தி கட முனிக்கு
மணக்கோலக் காட்சி தந்தான்“

என அழகாக வர்ணிக்கின்றார்.

இவ்வாறாக அகத்தியருக்குத் திருமணக்காட்சியருளிய பதி திருமறைக் காடு எனப்படும் வேதாரணியம். இங்கும் திருவதிகை வீரட்டானம் முதலிய வேறு சில தலங்களிலும் கர்ப்பக்கிரகத்தில் சிவலிங்கத் திருமேனிக்குப் பின்னாலே சிலா விக்கிரகமாக அல்லது புடை மூர்த்தமாகச் சுதையில் அமைக்கப்பட்டுள்ள தெவிட்டாத திருமணத் திருகோல தரிசனத்தைப் பெறக்கூடியதாயுள்ளது. ஆயினும் இவை எதுவும் கல்லாணசுந்தர மூர்த்தங்கள் அல்ல.

கல்யாணசுந்தர விக்கிரகங்கள் தமிழ்நாட்டின் ஒரு சில கோயில்களிலேயே இருக்கின்றன. சோழநாட்டில் திருவெண்காடு என்ற கிராமத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுத் தஞ்சைக் கலைக் கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கல்யாணசுந்தரர் திருவுருவம் உலகப் பிரசித்தி பெற்றது.

சிவகணங்களும்,தேவர்களும் கந்தர்வர்களும் கூட்டாகவும் தவ முனி அகத்தியன் தனித்தும் கண்ட திருமணத்தை நாம் ஆண்டு தோறும் - அதன் தத்துவத்தை அறிந்தோ அறியாமலோ - சிவாலயங்களில் நடத்துகின்றோம். ஆனால் உமையம்மையின் விருப்படி தமிழ் நாட்டிலேயே சிவன் - பார்வதி கல்யாணம் நடந்ததாகவும் ஐதிகம். சோழநாட்டிலே மாயூரத் துக்கு அண்மையில் அமைந்துள்ள தேவாரகாலத்தில் திருத்துருத்தி என அழைக்கப்பட்டதும் இக் காலத்தில் குத்தாலம் என அழைக்கப்படுவது மான திருத்தலம் (இது பாண்டி நாட்டில் குற்றால நீர்வீழ்ச்சி அமைந்துள்ள தென்பொதிகை மலைச்சாரலில் அமைந்துள்ள திருக்குற்றாலம் என்ற திருப்பதி அல்ல. குத்தாலம் வேறு குற்றாலம் வேறு), திருவேள்விக்குடி என்ற திருத்தலம், திருமணஞ்சேரி என்ற திருத்தலம் ஆகிய மூன்று தேவாரம் பெற்ற திருத்தலங்களை உள்ளடக்கியதாக இந்த ஐதிகம் நிலவுகிறது. கதை இதுதான்:

கைலாயத்தில் ஒரு சமயம் உமையம்மையார் இறைவனை நோக்கி, “ஐயனே இமாசலத்தில் எமக்குத் திருமணம் நடந்து எத்தனை கோடி ஆண்டுகளாகி விட்டன. என்னை மீண்டும் பூவுலகில் கரம் பற்றி திருமணம் செய்து கொள்ளவேண்டும்” என வேண்டினார். இறைவரும் அவள் விருபியவண்ணமே நடைபெற அநுக்கிரகித்தார். உமையம்மையார் காவிரிக் கரையிலமைந்த திருத்துருத்தி (குத்தாலம்) என்ற திருத்தலத்திலே பரத மகரிஷியின் யாகத்தீயில் தோன்றி இறைவனை வேண்டித் தவமிருந்தார். இறைவர் அம்மை முன் தோன்றி “நாமே விதித்த விதியின் படி நடந்து உன்னை மணம் கொள்வோம்” என்று அருள் புரிந்தார். இதனால் திருத்துருத்திமேய இறைவனுக்கு “சொன்னவாறு அறிவார்” என்ற காரணப்பெயர் ஏற்படலாயிற்று. பின் குத்தாலத்துக்கு சமீபமாகவுள்ள திருவேள்விக்குடியிலே சிவபெருமான் திருமணக் கோலம் பூண்டு காப்புக்கட்டிக் கொண்டதாகவும் திருமணஞ்சேரியிலே திருமணம் செய்து கொண்டதாகவும் ஐதீகம்.

தேவாரப்பாடல் பெற்ற இருநூற்று எழுபத்துநான்கு சிவத்தலங்களிலே, திருவேள்விக்குடி, திருமணஞ்சேரி ஆகிய இரண்டு தலங்களில் மட்டுமே இறைவர் கல்யாண சுந்தரேஸ்வரர் என்ற திருப்பெயர் தாங்கி மணவாளக் கோலத்துடன் அருள்சுரக்கிறார்.

திருவேள்விக்குடித் திருத்தலம் பற்றி இன்னுமோர் ஐதிகமுமுண்டு: அரசிளங் குமரன் ஒருவனுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் மணவினை நிறைவேறுமுன் மணப்பெண்ணின் பெற்றோர் இறந்துவிடுகின்றனர். சுற்றத்தார் பெண் கொடுக்க மறுக்கின்றனர். அரசிளங் குமரன் இறைவனை நோக்கித் தவம் செய்கிறான். இறைவன் மணப்பெண்ணைப் பூதமொன்றின் மூலம் கொணரச்செய்து தானே அரச குமாரனுக்கு திருமண வேள்வி செய்தருளுகின்றார். அதனால் அத்திருத்தலத்திற்கு வேள்விக்குடி என்ற காரணப்பெயர் ஏற்படலாயிற்று என்பதே கதை. இதனால் நீண்ட காலமாகத் திருமணம் தடைப்பட்டவர்கள் இங்கு வந்து கல்யாணசுந்தரரை வழிபட்டால் திருமணம் நடைபெறும் என்பது நம்பிக்கை.

திருவேள்விக்குடியைவிட திருமணஞ்சேரியே மக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்ற திருத்தலம். திருமணம் தடைப்பட்டவர்கள் திருமணஞ்சேரி வந்து, கல்யாணசுந்தரப் பெருமானுக்கு மாலை சாத்தி அர்ச்சனை செய்து வழிபட்டால் நிச்சயம் திருமணம் கைகூடும். அவ்வாறு திருமணம் நிச்சயிக்கப்பட்டவர்கள் மீண்டும் கோவிலுக்கு வந்து சுவாமிக்கு முன்னால் திருமணத்தை நடத்திக் கொள்ளுகின்றார்கள். இக்காட்சியை இன்றும் காணலாம். திருமண நாட்களிலும் வெள்ளிக் கிழமைகளிலும் இங்கு ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன. கல்யாணசுந்தரரை எழுந்தருளச் செய்து அவர் முன்னால் ஒரு புறம் வரிசையாக மாலை சாத்தி அருச்சனை செய்பவர்களையும், மறுபுறம் வரிசையாக திருமணம் நடந்தேறிய தம்பதிகளையும் அமரச் செய்து அருச்சனை செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும் அடுத்தடுத்துள்ள தலங்கள். இடையில் காவிரி பாய்கிறது. பகற்காலத்தில் திருத்துருத்தியிலும் இரவில் திருவேள்விக்குடியிலும் ஈசன் எழுந்தருளியிருப்பதாகத் தேவாரப் பதிகங்கள் கூறுகின்றன. இவ்விரு திருத்தலங்களையும் இணைத்தே திருப்பதிகங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

“புரிதரு சடையினர் புலியுரி அரையினர்
பொடியணிந்து
திரிதரு மியல்பினர் திரிபுர மூன்றையுந்
தீவளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையொடு ஒருபாகல்
அமர்ந்த பிரான்
விரிதரு துரத்தியார் இரவிடத்துறைவர்
வேள்விக்குடியே.”

- சம்பந்தர் -

“மொழியானை முன்னொரு நான்மறை
ஆறங்கம்
பழியாமைப் பண்ணிசையான பகர்வானை
வழியானை வானவர் ஏத்து மணஞ்சேரி
இழியாமை ஏத்தவல்லார்க்கு ஏய்தும்
இன்பமே”

- சம்பந்தர் -

(7ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேசுர வடிவங்கள்

(06ம் பக்கத் தொடர்ச்சி)

**பார்வதி கல்யாணக் கதையும் தத்துவமும்:**

**கதை:** பார்வதி தேவியார் சிவபெருமானை நீங்கி இமவானுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்து வந்தார். சிவபெருமான் சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கும் உண்மை ஞானத்தை உணர்த்த விரும்பி யோகநிலை மேற்கொண்டிருந்தார். அதனால் எல்லா உயிர்களும் போக நுகர்ச்சியற்று வாளாதிருந்தன. தேவர்கள் சிவபெருமானுடைய மௌன நிலையைக் குலைக்கும்படி காமனை ஏவினார்கள். காமன் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினாலே எரிக்கப்பட்டான். சிவபெருமான் பின்பு மோனநிலை நீங்கி உமையம்மையைத் திருமணஞ்செய்தருளினார். இரதி குறையிரந்து வேண்டக் காமனை எழுப்பி அருளினார். இது புராணக் கதை.

**உண்மை நூற் பொருள்:**

சிவபெருமான் தமது சக்தியுடன் கூடி அருவம், அருவுருவம், உருவம் எனப்படும் மூன்று வகை வடிவங்களைக் கொண்டு ஐந்தொழில் களைப் புரிவார். சர்வ சங்கார காலத்திலே, அதுவரையும் பிறந்து இறந்து இளைத்த உயிர்களை இளைப்பாறும்படி கேவலநிலையில் ஒடுக்குவார். அப்பொழுது சத்தியையும் தன்னுள்ளே அடக்கித் தானேயாய் நிற்பர்.அதுவே மோன நிலை. சத்தி சிவனுள்ளே அடங்கியிருக்கும் காலத்தையே, அவள் மலையரசன் மகளாக வளர்ந்து வரும் காலமாக உருவகப்படுத்தப்பட்டது.

மகாசங்கார காலத்திலே பக்குவப்பட்ட உயிர்களுக்குச் சிவபெருமான் வீடுபேற்றை அருளுவர். ஏனைய ஆன்மாக்கள் காரண கேவல நிலையை அடையும். காரண கேவல நிலையாவது, உயிர்கள் கலை முதலிய தத்துவங்களும் பர, சூக்கும, தூல உடம்புகளுமின்றி ஆணவமலமே தாமாய் அறிவிழந்து மலவிருளில் அழுந்தி நிற்கும் நிலையாகும். இந்நிலையே இறைவன் மோனநிலையெய்தி நின்றபோது உயிர்கள் செயலற்று நின்றன என்பதனால் உணர்த்தப்பட்டது.

உயிர்களுக்கு அவாவினாலே பிறப்புண்டாகின்றது. அவா மலத்தினாலே உண்டாகின்றது. மலம் சடப்பொருள். மலம் தானே இயங்கமாட்டாது. அதனை இறைவனது சத்தியே இயக்கும். அவ்வாறு மலத்தை இயக்கும் இறைவனது சக்திக்கு **திரோதான சத்தி** என்று பெயர். இவ்வாறு திரோதான சத்தியாலே இயக்கப்படும் அவாவைத்தான் காமன் எனக் கொள்ளப்படுகிறது. மகா சங்கார காலத்திலே பிறவிக்குக் காரணமாகிய அவாவும் திரோதான சத்தியால் இயக்கப்படாமையினால் ஒடுங்கி விடும். இதுவே காம தகனம் எனச் சித்தரிக்கப்படுகிறது.

சங்கார கால முடிவில், ஆன்மாக்களைக் காரண கேவல நிலையில் நின்றும் நீக்கிச் சகலம் முதலிய நிலைகளில் விடுதற்குச் சிவபெருமான் தனது திருவருட் சத்தியோடு கூடுவார். இங்கு கூடுதல் என்பது அச்சத்தியைத் தொழிற் படுத்தல் எனப் பொருள்படும். அவ்வாறு திருவருட் சத்தியைத் தொழிற்படுத்துதலையே **பார்வதி திருக்கல்யாணம்** என உருவகப் படுத்தப்பட்டது.

திருவருட் சத்தி தொழிற்பட, படைத்தல் முதலாய ஐந்தொழில் களும் நிகழும். இத்தொழில்கள் நிகழுதற்கு அதுவரை ஒடுங்கியிருந்த அவா எழுப்பப் பட வேண்டும். அவாவைத் திரோதானசத்தி எழுப்பும். இதனையே காமனை எழுப்பிய தாகப் புராணக்கதை கூறுகிறது.

(தொடரும்)

## சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம்

**சைவநெறித் தேர்வு - 2002**
**தரம் 2 முதல் 11 வரை**

**இந்து நாகரிகம் - இந்துசமயம்**
**தேர்வு 2002**
**தரம் 12**

**விண்ணப்ப இறுதிநாள்: 30.07.2002**

**தேர்வு நாள்: 26.10.2002** சனிக்கிழமை

* *அரசாங்க பாடத்திட்டத்திற்கு அமைவாகவே தேர்வு நடைபெறும்.*

* *சபை நடத்தும் சித்தாந்த, பிரவேச பாலபண்டிதர், பண்டிதர் தேர்வுகளுக்கு ஆசிரியப் பணி புரிபவர்களும், க.பொ.த. உயர்தர மாணவர்களும் தோற்றலாம். இப்பரீட்சைகள் 2003 வைகாசி மாதம் முதல் வாரத்தில் நடைபெறும்.*

**வ. கந்தசாமி**
**கௌரவ தேர்வுச் செயலாளர்.**

## இந்து சாதனம் - Hindu Organ வருட சந்தா விபரம்

**(தபாற்செலவு உட்பட)**

| | |
|---|---|
| இலங்கை | ரூபா 150/- |
| இந்தியா | இந்.ரூபா 225/- அல்லது இல.ரூபா 450/- |
| சிங்கப்பூர், மலேசியா | US $`5/- அல்லது இல.ரூபா 500/- |
| ஐரோப்பிய நாடுகள் | £ 4/- அல்லது Euro 6/- அல்லது இல.ரூபா 500/- |
| அவுஸ்திரேலியா | Aus $ 10/- அல்லது இல.ரூபா 500/- |
| கனடா, அமெரிக்கா | US $`8/- அல்லது Can. $`15/- அல்லது இல.ரூபா 700/- |

*காசோலைகள், காசுக்கட்டளைகள்* ***சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.***
**(Saiva Paripalana Sabai, Jaffna.)** *என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீரகவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

**சித்திரபானு ஸ்ரீ வைகாசி மீ 12 (26.05.2002)**

## சிதம்பரம் புண்ணியநாச்சி அம்மை மடம்

சிதம்பரம் புண்ணியநாச்சி அம்மை திருமட மீளமைப்பு வேலைகள் முடிவடைந்து ஆனித் திங்கள் இரண்டாம் நாள் கட்டடத் திறப்புவிழா நடைபெறவிருக்கின்றது என்ற செய்தி சைவ உலகை மகிழ்விக்கும்.

யாழ்ப்பாணத்தில் பல தசாப்தங்களுக்கு (120 வருடங்களுக்கு) முன் வாழ்ந்த புண்ணியநாச்சி அம்மையார் என்ற மாதரசி தமது பிற்காலத்தில் சிதம்பரசபாநாயகர் மீது ஆராவன்பு கொண்டு "சிதம்பரம் அம்பலவாண சுவாமி புண்ணியநாச்சி தருமம்" எனப்படும் அறக்கட்டளையை நிறுவி சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் திருமடமமைத்து அனைத் துயிர்க்கும் அருள் தாங்கித் தவ வாழ்வு வாழ்ந்தவர். புண்ணியநாச்சி அறக் கட்டளையின் நோக்கங்கள் சிதம்பர சபாநாயகருக்கு மாதகக்கட்டளைகள், மார்கழித்திருவாதிரை தோறும் அம்பலவாணருக்கு அபிஷேக ஆராதனை அம்பலவாணரை வழிபடச்செல்லும் ஈழத்து அடியார்கள் வசதியாக இளைப்பாறிச் செல்ல வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவையாகும். இதற்காக அவர் சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் பரந்தனிலும் போதிய சொத்துக்களைத் தர்மசாதனம் செய்துள்ளார். இத்தருமம் ஆரம்பிக்கப்பட்டு குறைந்தது அரை நூற்றாண்டின் பின் 1938 ஆம் ஆண்டில் இத்தருமத்தின் தர்மபரிபாலனமும் முகாமைத்துவமும் யாழ் மாவட்ட நீதிமன்றினால் யாழ் சைவ பரிபாலன சபைக்கு உரித்தாக்கப்பட்டது.

தர்மச்சொத்துக்கள் நம்பிக்கைச் சொத்துக்கள். அவை அவற்றை நிறுவியவர்களது நோக்கங்களுக்கமைய உபயோகப்படுத்தப்படுதல் வேண்டும். சிதம்பரத்தில், திருமறைக்காட்டில், இராமேஸ்வரத்தில், திருவண்ணாமலையில், சென்னையில் மதுரையில், திருச்செந்தூரில், கோடைக் கானலில், திருநெல்வேலியில், திருச்சிராப்பள்ளியில் எல்லாம் ஈழத்தவர்களின் அறக்கட்டளைகளும் தர்மச் சொத்துக்களும் ஏராளம் உள்ளன. இவ்வறக் கட்டளைகள் தமிழகக் கோயில்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையே நிலவிய தொடர்பின் - நெருக்கத்தின்-பதிவுகளாக வரலாற்று ஆவணங்களாக -வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன.

இலங்கையில் தமிழகக் கோவில்களுக்குத் தர்மசாதனம் செய்யப்பட்ட சொத்துக்கள் பல இருக்கின்றன. இவையும் தமிழக ஈழத் தொடர்புகளை நினைவூட்டிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் பதிவுகள். இவற்றுள் இராமேஸ்வரம் கோயிலுக்குச் சொந்தமான ஆதனங்களை அவ்வாலய நிர்வாகம் விற்க முற்பட்டபோது நாம் அதனைக் கடுமையாக ஆட்சேபித்து இப்பத்திகளில் எழுதியிருந்தோம்.

தமிழகத்திலுள்ள ஈழத்தவர்களின் அறக்கட்டளைச் சொத்துக்களில் பல இப்போது சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ளன. சில மடங்கள் பற்றி நீதிமன்ற வழக்குகள் நடைபெறுகின்றன. தமிழகத்திலுள்ள ஈழத்தவர்களின் அறக் கட்டளைகளைச் சிதைந்துவிடாது பாதுகாத்துப்பேணி அவை துடிப்புள்ள நிலையங்களாகத் தொடர்ந்து இயங்குவதை உறுதிப்படுத்துவதும் தமிழ்நாட்டில் தமக்கு உரிய பாரம்பரியங்களை அழியவிடாது பாதுகாக்க வேண்டியதும் ஈழத்தவரின் தட்டிக் கழிக்கக் கூடாத கடமையாகும்.

சிதம்பரம் புண்ணிய நாச்சிமட அறக்கட்டளைச் சொத்துக்களும் சிறிது சிறிதாக ஈழத்தமிழரின் கையிலிருந்து நழுவிக் கொண்டிருப்பதாகவே சில வருடங்களுக்கு முன் கருத வேண்டியிருந்தது. தக்க தருணத்தில் சைவபரிபாலன சபையின் கடமையுணர்வுள்ள பிரதிநிதியாகப் பணியாற்றும் திரு. வி. இராமநாதன் அவர்களும் சபையின் முன்னாட் செயலாளரும் மூத்த உறுப்பினரும் அர்ப்பணிப்புமிக்க சமயத் தொண்டனுமாகிய திரு. த. சண்முகலிங்கம் அவர்களும் பேருக்கமெடுத்து சிதம்பரத்திலுள்ள அறக் கட்டளைச் சொத்துக் களைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததோடன்றிப் பெருந் தொகைச் செலவில் மடத்தை இக்கால தேவைகளுக்கு ஏற்ப சகல நவீன வசதிகளுடன் மீள அமைத்துள்ளார்கள். இவர்களது துணிச்சலும் அர்ப்பணிப்பும் மிக்க பயன்கருதாச் சேவைக்காக ஈழத்துச் சைவ சமூகம் இவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளது.

இவர்கள் காட்டியுள்ள வழியில் தமிழ்நாட்டிலுள்ள தமக்குரிய அறக்கட்டளைகள், பாரம்பரியங்களை மீள அமைக்க ஈழத்துச் சைவ சமூகம் காலம்தாழ்த்தாது நடிவடிக்கை எடுக்க வேண்டும். ஆடவல்லான் அருள்பாலிப்பாராக. •

## கிலமாயுள்ள மடத்தைப் புதுக்குவித்தல்

*மடத்தைக் கட்டுவித்தவரும், மடத்திலே வேதாகமத் திருமுறைகளைச் சம்பாதித்து வைத்துப் பூசை செய்தற் பொருட்டும், வேதாகமங்களைப் படிப்பவருக்கும் படிப்பிப்பவருக்கும் அன்னம் வஸ்திரம் மருந்து முதலியவை கொடுத்தற் பொருட்டும், திரவியங்களையும் பூமிகளையும் தானம் செய்தவரும், **கிலமாயுள்ள மடத்தைப் புதுக்குவித்தவரும்,** கடவுளுடைய உலகத்தை அடைந்து இன்பம் அனுபவித்து வாழ்வர்.*

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
(பாலபாடம் – நான்காம் புத்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சிதம்பரம் புண்ணியநாச்சி மடம் கட்டடத் திறப்பு விழா

****************

**நிகழ்ச்சி நிரல்**

**16.06.2002: ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி**

| | |
|---|---|
| இறைவணக்கம் : | இசைக்கலைமணி **திரு. வீ.உதயகுமார்** அவர்கள் மட்டக்களப்பு, இலங்கை |
| மங்கள விளக்கேற்றல்: | **திரு.க.சுவாமிநாதன்** அவர்கள் அறங்காவலர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளை, சிதம்பரம். **திருமதி Dr.பழநி சுவாமிநாதன்** அவர்கள், சிதம்பரம். |
| தலைமை வகித்து இடபக் கொடியேற்றல்: | **பேராசிரியர், முனைவர் வை.இரத்தினசபாபதி** அவர்கள் சென்னை. |
| முன்னிலை வகித்தல் : | **மாண்பமை, திரு. எம்.எஸ்.என்.குமார்** அவர்கள் சிதம்பரம் நகர் மன்றத் தலைவர். |
| திறந்துவைத்தல் : | **திரு.எம். சுப்பராயப்பிள்ளை** அவர்கள் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அறக்கட்டளைக் குழுத் தலைவர், சிதம்பரம். |
| வாழ்த்துரை : | **வழக்கறிஞர் திரு. அ. சம்பந்தன்** அவர்கள் சிதம்பரம் கயிலைப்புனிதர் **இர. இராமநாதன்** அவர்கள் சிதம்பரம் சைவசித்தாந்த கலாநிதி **திரு.க. கணேசலிங்கம்** அவர்கள் யாழ்ப்பாணம். |
| கட்டட அமைப்பு - மேற்பார்வை செய்த பொறியாளரைக் கௌரவித்தல் : | **திரு.வி. இராமநாதன்** அவர்கள், சைவபரிபாலன சபைப் பிரதிநிதி |
| நன்றியுரை : | **திரு. த. சண்முகலிங்கம்** அவர்கள் சைவபரிபாலன சபை முன்னாள் செயலாளரும் மூத்த உறுப்பினரும். |

## கட்டடத் திறப்பு விழா

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

*தொன்றாகவிருந்த போதிலும் அப்பாரிய கடமையை முன்னின்று செய்து ஒப்பேற்ற எவரும் முன்வரவில்லை. 1999 ஆம் ஆண்டளவில் இம்மடம் பற்றிய விடயங்களைக் கவனிப்பதற்கு சைவ பரிபாலன சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டவராகிய கொழும்பு வாழ் பிரபல சமய, சமூக சேவையாளர் திரு.வி. இராமநாதன் அவர்களும் சபையின் மூத்த உறுப்பினரும் முன்னாட் செயலாளருமாகிய திரு.த. சண்முகலிங்கம் அவர்களும் பழைய கட்டடத்தை அகற்றிவிட்டு அவ்விடத்தில் புதிய கட்டடமொன்றை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். புதிய இரண்டடுக்கு மாடிக் கட்டடமொன்றை அமைப்பதற்கான வரைபடங்களை வரைவித்து சபையின் அங்கீகாரத்தையும் சிதம்பரம் நகர் மன்ற அனுமதியையும் பெற்றுக் கொண்டனர். பிரமாதி வருடம் கார்த்திகைத்திங்கள் இருபத்தொன்பதாம் நாள் (15.12.1999) சுபநேரத்தில் புதிய கட்டடத்திற்கு அத்திபாரமிடப் பட்டது. (இந்துசாதனம் புத்தகம்110, இதழ் 10 செய்தியைப் பார்க்க).*

*இவ்விரு பரோபகாரிகளும் பல தடவை கொழும்புக்கும் சிதம்பரத்துக்குமிடையே பயணித்தும் சிதம்பரத்தில் பல மாதங்கள் தங்கியிருந்தும், சைவாபிமானம் கொண்ட கொழும்பிலும் மேலை நாடுகளிலும் வாழும் சில பரோபகாரிகளிடம் நிதியுதவி பெற்றும் தமது சொந்தப்பணத்தைச்*

**(13ம் பக்கம் பார்க்க)**

## சேக்கிழார் பதமலர் தெண்டனிட்டு வினை போக்குவாம்

அண்டவாணர் தொழு தில்லையம்பலவர்
அடியெடுத்து உலகெலாமெனத்
தொண்டர் சீர்பரவு சேக்கிழான் வரிசை
துன்று குன்றை நகராதிபன்
தண்டகாதிபதி திருநெறித் தலைமை
தங்கு செங்கை முகில் பைங்கழற்
புண்டரீகமலர் தெண்டனிட்டு வினை
போக்குவார் பிறவி நீக்குவார்.

**சேக்கிழார் குருபூசை:**
**வைகாசிப் பூசம் (14.06.2002) வெள்ளிக்கிழமை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேன்மைகொள் சைவநீதி"

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமுறை தேரைச் செலுத்திச் செல்லுங்கால் தேர்க் காலில் தவறுதலாகச் சிக்கி மாண்ட பசுக் கன்றின் தாய் பெற்ற துன்பத் தைத்தானும் பெறுதலே நீதி என உணர்ந்து தனது மகன் மீது தானே தேரூர்ந்து நீதி வழங்க முனைந்த அருமை மிக்க நீதிப் பண்பை இம்மன்னன் கொண்டிருந்தான் என்று நாம் அறிகின்றோம். இவ்வரலாறானது எமக்கு வழங்கும் முக்கிய செய்தியொன்று உண்டு. நீதி வழங்கும் திறத்தில் உறவு, அந் நீதியை வழங்குவோனின் நடுநிலை தவறாத் தன்மையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த லாகாது என்பதே அது.

இம் மாக்கதை பெரிய புராணத்தில் திருவாரூர் நகரச் சிறப்பில் பக்தியிற் பெரியோன் சேக்கிழார் பெருமானாரால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எமக் கிங்கு முக்கியமானது யாதெனில் சேக்கிழார் பெருமானால் மனுநீதிச் சோழனின் வாய்மொழியாக ஆட்சித் தலைவனின் இயல்புகள் பற்றி கூறப்பட்டுள்ளவைகளாகும். அந்தச் சீர்மிகு பாடல் இது:

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானு தனுக்கிடையூ று தன்னால் தன் பரிசனத்தால்
ஊன மிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்து அறங் காப்பான் அல்லனோ"

## இறை அன்பு

சைவத்தின் முழுமுதற் கடவுளாக - பரம்பொருளாக - கொள்ளப்படுபவர் சிவபெருமான். அவரே வேதங்களையும் சிவாக மங்களையும் அருளிச் செய்தவர் எனக்கொள்ளப்படுகின்றார். உயிரின் நன்மை கருதி அவர் ஐந்தொழில் புரிகின்றார். குணங்குறிகளற்ற அவ் விறைவன் எமக்காக எண்குணத் தான் ஆகின்றார். இமைப்பொழுதும் தன்னைத் தொழுவார் நெஞ்சில் நீங்கா இயல்பு பெற்றவர். அவரே சைவம் சுட்டும் நீதியின் தனிப் பெரும் வடிவமாகின்றார். சிவனே அனைத்து ஜீவராசிகளுக்கும் நீதி வழங்கும் நீதியரசராக விளங்கு கின்றார். அவரது நீதி வழங்குமுறை தன்னிகரற்றது. அவரது நீதித்தீர்ப்பின் அடிநாதம் அறநெறியும் அன்பு எனும் பெரும் சக்தியுமாகும். அன்பு வழி செல்பவன், பிறப்பு அறப் பெற்று, இறைவனின் திருவடி நீழலை அடைந்து நிலையான இன்பம் கிடைக்கப் பெறுவான். தமது மனத்தில் அன்பை விளைக்காத வர்கள் பிறவிக்கடலில் உழன்று துன்பமாகிய காட்டகத்தே நெறியறி யாது தவித்திடுவார். இதுவே தெய்வ நீதியின் தீர்ப்பாகும். இதனைத் திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"ஆர்வர் உடையவர் காண்பார் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்கு புக்காரே"

ஆர்வம் உடையவர் - மிக அன்பு உடையவர்; ஈரம் - அன்பினால் உண்டாகும் மன நெகிழ்ச்சி; கொங்கு - காடு. ஒருவனது அன்பை அளவிட இறை வற்கு அளவுகோல் வேண்டிய தில்லை. அவன் முற்றும் அறிந்தவன் - முற்றும் உணர்ந்தவன். இதனைத் தவமொழியாம் திருமந்திரம்,

"இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல்லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யும் அருளதுவாமே"

என அழகு தமிழில் குறிப்பிட்டு நிற்கின்றது.

இறைவனுடைய கருணை யானது அடியார்கள் எந்நிலையில் - என்ன அறிவு நிலையில் - நின்று தன்மீது அன்பு செலுத்துகின்றார்கள் என்பதைப் பொறுத்து அதற்கேற்ப அருள் வழங்கும் தன்மையுடையது. இவ்வுண்மையை நாம் பெரியபுரா ணத்தில் பேசப்படுகின்ற கண்ணப்ப நாயனார் புராணத்தில் காணக்கூடிய தாகவுள்ளது.

திண்ணனார் (கண்ணப்பரின் இயற்பெயர்) வேடுவர் குலத்தைச் சார்ந்தவர். கல்வி வாசனை சிறிது மற்ற ஒருவர். காளத்திநாதராம் குடுமித்தேவரை திண்ணனார் தமக் குத்தெரிந்த வழியிலே பூசனைபுரி கின்றார். அது முற்றுமுழுதாகப் பேரன்பின் பாற்பட்ட வழிபாடு. தமது வாயையே அபிஷேக நீரிற்கான கமண்டலமாகவும் இறைவற்கு சுவை உடையதாக இருக்க வேண்டும் என்ற அன்பு நோக்கம் கொண்டு தன்னால் சுவைத்தறியப் பட்ட ஊனையே நிவேதனமாகவும், குடுமியில் செருகப்பட்ட காட்டுப் பூக்களையே அர்ச்சனைப் பொருளாகவும் கொண்டு இறைவ னை ஆராதிக்கிறார் திண்ணனார்.

சிவகோசரியார் அந்தணர் குலத்தைச் சேர்ந்த -ஆகமக் கல்வி யறிவு நிரம்பிய - உத்தம தவமுடை யவர். எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கேற்ப கொய்த மலரும் புனலும் முதலான கொண்டணைந்து மைதழையும் கண்டத்து மலை மருந்தை வழிபாடு செய்துவரும் பண்பை உடையவர் இவ் அந்தணப் பெருமகன். இவ்வா றாக இறைவனை ஆராதிக்கும் பண்புடைய சிவகோசரியாருக்கு திண்ணனாருடைய செயற்பாடுகள் தாங்கொணாத் துன்பத்தைத் தருகிறது. சிவகோசரியாரது விசனத் தைப் போக்க இறைவன் அவரது கனவில் தோன்றிக் கூறியதைச் சேக்கிழார் மிக அழகாகக் கூறு கிறார்:

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினி யவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறி நீ என்றருள் செய்தார்"

திண்ணனாருடைய வடிவும் அறிவும் இறைவனை அன்பு செய்ய வேண்டும் - அவனை அறிய வேண்டும் - என்பது காரணமாக அமைவதனால், அவனுடைய செயலானது இறைவனுக்கு இனியதாக அமைகிறது. இதனை உலகிற்கும் சிவகோசரியாருக்கும் உணர்த்தத் திருவுளம் கொண்ட அண்ணலார் திருக்காளத்தி அப்பர், 'திருநயனத்தில் ஒன்று துண்ணென உதிரம்பாய' அமர்ந்திருந்து திருவிளையாடல் புரிந்தருளுகிறார். அதன் பின் நடந்தவை யாவரு மறிந்ததே. இங்கு கண்ணப்பரின் அறிவு எல்லைக்குள் அவர் செயற் பாடு இறைவனுக்கு மிகப் பிரியமான தாயிற்று. கற்றறிந்தவ ரான சிவகோசாரியார் அவ்வாறு நடந்திருந்தால் அது நீதிக்கு அப்பாற்பட்டது.

ஒருவர் எத்துணை பெரியவ ராயிருப்பினும் தெரிந்து கொண்டு குற்றம் செய்யின் அதற்குரிய தண்ட னையைப் பெறுவதிலிருந்து - சைவ நீதியின் கண்களிலிருந்து - அவர் தப்பித்து விடமுடியாது. அவர் கல்வியிற் சிறந்தவராகவோ, இறைவன் மீது தேனொழுகும்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேன்மைகொள் சைவநீதி"

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பை உடையவராகவோ, அவ் இறைவனது தோழராக இருப்பதன் காரணமாகவோ செய்த குற்றத்திலிருந்து தண்டனை பெறாது, விலக்குப்பெற முடியாது. சுந்தரர் வாழ்வில் ஏற்பட்ட முக்கிய சம்பவமொன்று இதற்கு நல்லதொரு உதாரணமாக அமைகிறது.

திருவாசக,தேவாரமுதலிகள் நால்வரது பாதை ஒவ்வொன்றும் வெவ்வேறானவை என்பதை நாம் அறிவோம். ஞானசம்பந்தர் சற்புத்திரமார்க்கத்தில் நின்று இறைவனோடு தந்தை மகன் உறவைக் காட்டி நின்றார். அப்பர் தாசமார்க்கத்தில் நின்று இறைவனோடு அடிமை உறவு பூண்டொழுகினார். மாணிக்கவாசகர் சன்மார்க்க வழி நின்று இறைவனைக் குருவாகக் கொண்டு தொழுதேற்றினார். சுந்தரர் சகமார்க்கவழி நின்று இறைவனின் தோழராகத் தம்மைப் பாவித்து உறவுநிலை பேணினார்.

இறைவனானவர் சுந்தரர் தம் தோழராக இருந்தபோதிலும் அவர் தனது சத்தியத்தை மீறியபோது வாளா இருக்கவில்லை. சுந்தரரின் கண்ணொளியைப் பறித்து சைவநீதியின் பக்கச் சார்பற்ற நடுநிலை தவறாத தன்மையை உலகிற்கு உணர்த்தினார். அவ்வரலாற்றை நோக்குவோம்.

முற்தொடர்பு காரணமாகச் சுந்தரர் சங்கிலியாரை மணந்து திருவொற்றியூரில் வாழும்படியாயிற்று. திருமணத்திற்கான நிபந்தனையாக சங்கிலியாரைப் பிரிந்திருக்கமாட்டேன் எனச் சத்தியம் செய்ய வேண்டியுமாயிற்று. ஆயினும் சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரிடத்தே வாழ்ந்து வந்த காலத்திலே திருவாரூர் வசந்த திருவிழா நடைபெறுங்காலம் நெருங்கியதும் பழைய நினைவுகளின் இனிமையை நினைந்து தியாகராசப் பெருமான் மீது அன்பு மீதூர ஏங்கி எம்பெருமானைத் தரிசிக்க ஏங்கித் தவிக்கிறார்:

"பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தின நோய் அது இதனைப்பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினை மாமணி தன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே"

எனும் அவரது பாடல் அவரது ஏக்கத்தை வெளிக்காட்டி நிற்கின்றது. இதன் விளைவாக சங்கிலியாருக்கு உம்மைப் பிரியோம் எனக்கொடுத்த வாக்கையும் மீறத்துணிந்து திருவொற்றியூர் எல்லையைக் கடந்தார். அக்கணமே அவரது கண்களிரண்டும் ஒளியிழந்தன. வாக்குத் தவறிய சுந்தரற்கு அவரது தோழராம் இறைவன் வழங்கிய நீதி இது. அது நண்பனாகினும் நடுநிலை தவறா நீதி. சுந்தரர் தம் பிழையை ஒப்புக்கொண்டு இறைவனின் நீதியான தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்ற போதிலும் தண்டனையிலிருந்து விமோசனம் அளிக்கும் வண்ணம் இரக்கிறார்.

"அழுக்கு மெய்கொடு உன்திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வார் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய்
ஒற்றி யூ ரெனும் ஊர் உறைவானே"

என்ற பாடல் அவரது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றது. நான் குற்றம் செய்யினும் உம்மை - உம் நாமத்தை - உம் திருவடியை - மறந்திலேன்; ஆதலால் நீர் எமக்கு கருணை காட்டவேண்டும் என இரக்கிறார்.

குற்றம் செய்பவன் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும். குற்றத்தை நன்கு உணர வேண்டும். அதன்பின் தெய்வ அநுக்கிரகத்தால் விமோசனமும் உண்டு என்பது சைவநீதி. சுந்தரர் தனது துன்பத்தையெல்லாம் எடுத்துச் சொல்லியும் தாம் இறைவர் மீது எத்துணை பக்தி பூண்டு - மீளா அடிமை பூண்டு - ஒழுகியும், இறைவர் வாளாதிருக்கிறார்; அவர் வாழ்ந்து போகட்டும் என ஏசுமாற் போல வாழ்த்திய போதிலும், இறைவர் ''உளோம் போகீர்'' எனக் கூறியமை அப்பழுக்கற்ற நீதி நிலைநாட்டப்படுவதைக் காட்டா நிற்கிறது. பின்னர் படிப்படியாக சுந்தரருக்கு நிவாரணமளித்து இறுதியில் இரண்டு கண்களிலும் ஒளி கொடுத்த செயலானது இறைவனது கருணையை எடுத்துக்காட்டுகிறது. வேறு சில சமயங்களில் கூறப்படுவது போல இறைவன் குறித்த ஒரு சமயத்தைச் சார்ந்தவர்களைப் பாவமன்னிப்பு என்ற சடங்கினூடு குற்றங்களிலிருந்து விடுவித்து விடுவதுமில்லை. அச்சமயத்தைச் சாராதோரை நிரந்தரநரகில் உழல விடுவதுமில்லை. சைவநீதியில் தண்டனையும் உண்டு, விமோசனமும் உண்டு - அது எல்லோருக்கும் உண்டு. இது சைவநீதியின் உயர் நிலை.

இறையன்பு என்பது தனியே இறைவனிடத்தே அன்பு கொள்ளுதல் எனப்பொருள்படாது. பிற சீவராசிகள் மீது நாம் அன்பைச் செலுத்தும் போதே இறைவனிடத்து நாம் கொண்ட அன்பு அர்த்தமுடையதாக விருக்கும். - ஏனெனில் இறைவன் தாயிற் சிறந்த தயாவான தத்துவன். அவன் உயிர்கள் மீது வைத்துள்ள அன்புக்கு எல்லையில்லை. தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு இரங்கித் தாய்ப்பன்றியாக உருவெடுத்துப் பாலூட்டிய, பிரசவ வேதனையில் தவித்த மங்கைக்குத் தாயாக உருவெடுத்துச் சென்று மருத்துவிச்சிப் பணி செய்த தயாளன் அல்லவா அவன். ஆகவே இறைவனால் நேசிக்கப்படும் உயிர்கள் மீது நாம் வைக்கும் அன்பு, இறைவன் மீது நாம் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக அமையும். பிறவுயிர்களின் துன்பத்தைத் துடைப்பதில் பங்கு கொள்வதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் இறைவன் தன்னையே முன்னுதாரணமாக்கி எமக்கு உணர்த்தியுள்ளார். மக்கள் சேவை மகேசன் சேவை என்பதைச் சைவநீதி பெரிதும் வலியுறுத்துவதை நாம் உணர்ந்து கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகையிலே சைவசமயம் சுட்டும் நீதியானது அன்பு செய்தல், ஒழுக்க (அற) நெறி வாழ்தல் ஆகிய இரண்டையும் இரு கண்ணாகக் கொண்டது என்பதைக் கண்டோம். தாம் போற்றுவதும் பிறர் போற்றுவதற்குரியதுமான ஓர் நெறியை இறைவனோடு தொடர்புபடுத்திவிடுதல் சான்றோர் பண்பு. அந்த வகையிலே எமது முதாதையர் இறைவனை நீதி வடிவினனாகவே கண்டனர். ஏன்? நீதியையும் இறைவனையும் இரு வேறு பொருளாகக் கூடச் சிந்திக்க அவர்கள் தயங்கினர். மணிவாசகப் பெருமான் 'பங்கயத் தயனும் மாலும் அறியா நீதியே' என இறைவனையே நீதி வடிவினனாகக் காணும் சிறப்பு

(13ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலன சபை

(05ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டத்திலும் பார்க்க மேலைத் தேசங்களில் துன்மார்க்கம் அதிகமுள்ளதென்பதும், யாருமறிந்த உண்மை. இதனையும் கிறிஸ்தவர்கள் மறைக்கத் துணிகின்றனர். கிறீஸ்து மத விசுவாசம் மேலைத் தேசங்களிற் குறைந்து தேய்ந்து போகின்றதென்பதற்கு இவ்விலங்கா தீபத்தில் சிவில் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் ஆங்கிலத்துரை மார்களே போதிய சான்றாகின்றனர். இங்கிலாந்திலுள்ள பெரிய கல்லூரிகளிற் கல்வி கற்றுச் சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்திபெற்று இங்கு வந்த வாலிப உத்தியோகஸ்தர் அனேகருடைய மார்க்க நிலையை யாமறிவோம். இவர்களெல்லாம் சந்தேகவாத நிரீச்சுரவாதக் கொள்கையுடையோராயிருக்கின்றனர். இங்கு இவ்வாறிருந்தால் இங்கிலாந்தில் எவ்வாறு இருக்குமென்பது நாம் சொல்லவேண்டுமா? இனி இங்கோ அங்கோ துன்மார்க்கம் அதிகமுள்ளதென்பது சனத்தொகையாலும், பிரமாணத் தாலும் சமத்துவமுடைய இரண்டு கிராமங்களை அல்லது பட்டினங் களை எடுத்து ஒப்பிட்டுப் பார்க்கின் விளங்கும்.

எம்மதத்திலும் தம் மதமே அதி விசேடமுடையது, அதுவே எச்சபையிலும் அரங்கேறக் கூடியதென நினைந்து அதைப் பிரபல்யப் படுத்தும் நோக்கமாய்க் கிறிஸ்தவர்கள் மார்க்க மகாசபையைக் கூட்ட, அதில் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் பிரசங்கித்த திறமையினால் இந்துமதம் முதன்மை பெற்று அரங்கேறியது.

கிறிஸ்தவமத விசுவாசம் வரவரக் குறைந்து போகின்றதென்பதும். இப்புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலும் பார்க்க மேலைத் தேசங்களில் துன்மார்க்கம் அதிகமுள்ளதென்பதும், யாருமறிந்த உண்மை. இதனையுங் கிறிஸ்தவர்கள் மறைக்கத் துணிகின்றனர். கிறீஸ்து மத விசுவாசம் மேலைத் தேசங்களிற் குறைந்து தேய்ந்து போகின்றதென்பதற்கு இவ்விலங்கா தீபத்தில் சிவில் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் ஆங்கிலத்துரை மார்களே போதிய சான்றாகின்றனர். இங்கிலாந்திலுள்ள பெரிய கல்லூரிகளிற் கல்வி கற்றுச் சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்திபெற்று இங்கு வந்த வாலிப உத்தியோகஸ்தர் அனேகருடைய மார்க்க நிலையை யாமறி வோம். இவர்களெல்லாம் சந்தேக வாத நிரீச்சுரவாதக் கொள்கை யுடையோரா யிருக்கின்றனர். இங்கு இவ்வாறிருந்தால் இங்கிலாந்தில் எவ்வாறு இருக்குமென்பது நாம் சொல்லவேண்டுமா? இனி இங்கோ அங்கோ துன்மார்க்கம் அதிகமுள்ளதென்பது சனத்தொகையாலும், பிரமாணத்தாலும் சமத்துவமுடைய இரண்டு கிராமங்களை அல்லது பட்டினங்களை எடுத்து ஒப்பிட்டுப் பார்க்கின் விளங்கும்.

எம்மதத்திலும் தம் மதமே அதி விசேடமுடையது, அதுவே எச்சபையிலும் அரங்கேறக் கூடியதென நினைந்து அதைப் பிரபல்யப் படுத்தும் நோக்கமாய்க் கிறிஸ்தவர்கள் மார்க்க மகாசபையைக் கூட்ட, அதில் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் பிரசங்கித்த திறமையினால் இந்துமதம் முதன்மை பெற்று அரங்கேறியது.

## தற்காலிக முகாமையாளர் நியமனம்

இந்துக்கல்லூரி முகாமையாளராகப் பணியாற்றி வந்த நியாய துரந்தரர் சி. நாகலிங்கம் அவர்கள் மன்னாரில் நடந்த ஒரு நீதிமன்ற வழக்கிற்கு ஏற்படுமாறு அழைக்கப் பட்டிருந்தார். அவர் அங்கு சென்றவிடத்து சுவாசப்பையை நோய்க் கிருமிகள் தாக்கியதால் சுகயீனமுற்றார். அதனால் ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 26 ஆம் நாள் (07.05.1897) கூடிய நிருவாகசபைக் கூட்டத்தில், திரு. நாகலிங்கம் அவர்கள் சுகமடையும் வரை முகாமையாளர் கடமைகளைச் சபைச் செயலாளர் திரு. வி. காசிப்பிள்ளை அவர்கள் கவனித்து வருதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அந்நிருவாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட இதர விடயங்கள் பின்வருமாறு:

அ) திரு. எஸ். வைத்திலிங்கம் என்பவரை சித்திரை மாதம் எட்டாம் திகதி முதல் சிலகாலத்திற்கு இந்துக் கல்லூரி உதவி ஆசிரியராக மாதம் 45 ரூபா சம்பளத்தில் வைத்துக் கொள்வது.

ஆ) 1897 தை மாதமுதல் கல்லூரி அதிபர் திரு.நெவின் செல்லத்துரை அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை மாதமொன்றுக்கு நூறு ரூபாவாக உயர்த்துவது.

ஆனி மாதம் முப்பதாம் நாள் (12.07.1897) திரு. சித. மு. பசுபதிச் செட்டியார் அவர்களது இல்லத்திலே கூடிய நிருவாகசபைக் கூட்டத்தில் திரு. விசுவநாதர் சங்கரப்பிள்ளை, B.A. என்பவரை மாசம் ஒன்றுக்கு ஐம்பது ரூபா வேதனம் கொடுத்து ஆசிரியராக நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## திரு. நாகலிங்கம் அவர்கள் மறைவு:

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்து சாதனம் - Hindu Organ பத்திரிகைகள் ஆகியவற்றின் உயிர் நாடியாகத் திகழ்ந்தவரும் பெரும் தேசபக்தனும் பொதுசன சேவையாளனுமாகிய அட்வகேட் சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்கள் தமது நாற்பத்தியிரண்டாவது வயதில் ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் இருபத்தோராம் நாள் (04.08.1897) புதன்கிழமை பிற்பகல் ஆறுமணியளவில் பூர்வ பட்ச சப்தமி திதியுடன் கூடிய சித்திரை நட்சத்திரத்தில் பெருமிழலைக் குறும்பநாயனார் குருபூசைத் தினத்திலே இவ்வுலக வாழ்வை நீர்த்தார்

**நச்சு மனத் தீயவரை நல்காது யமனுக்கு**
**மெச்சு புகழ் நாகலிங்க வேளையோ -அச்சமின்றிப்**
**பற்றிக் கொடுத்தனை பாழ்விதியே நல்லறத்துக்கு**
**உற்ற துணை யாரோ உரை**

யாழ்ப்பாணம் கொடுத்துவைக்கவில்லை. தன்னலமற்ற தியாகி ஒருவரை நாற்பத்திரண்டு வயதில் இழந்துவிட்டுக் கண்ணீர் வடித்தது. இப்பெருமகன் இந்த மண்ணுக்கு ஆற்றிய சேவைகள் பற்றிய முழு விபரம் அப்போதைய Hindu Organ பத்திராதிபர் திரு.அ.சபாபதி அவர்கள் Hindu Organ பத்திரிகையில் எழுதிய இரங்கல் உரையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. (இவ்விரங்கல் உரையின் தமிழ் மொழிபெயர்ப்பு அடுத்த இதழில் பிரசுரமாகும்).

அமரர் நாகலிங்கம் அவர்களின் சோகம் நிறைந்த இறுதிக் கிரிகைகள் அவரது சகோதரர் திரு.சி. வேலுப்பிள்ளை அவர்களாலே வண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் நிறைவேற்றப் பட்டது. அந்தியேட்டி முதலான அபரக்கிரியைகள் இராமேஸ்வரத்தில் நிறைவேறின.

(தொடரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேன்மைகொள் சைவநீதி"

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஆகவே இதிலிருந்து நாம் ஓர் பாடத்தைக் கற்கமுடியும். அதுயாதெனில் சைவம் சுட்டும் நீதி நெறிவழி ஒழுகாதோரும் பேணாதாரும் இறைவனையே நிந்தித்த பாவத்தைப் பெறுவார் என்பதே அதுவாம்.

இவ்வாறே இறைவனை அன்பு வடிவினனாகவும் எம்மவர் கண்டனர். " அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்" என்பது திருமூலர் வாக்கு. அன்பெனும் பண்பு உடையோர் சிவமாகவே மாறிவிடுவர் என்ற திருமூலர் தவமொழி சைவசமயம் அன்புக்கு அளிக்கும் உயர்நிலையைக் காட்டி நிற்கிறது.

இன்று சைவசமயிகள் எனப்படு வோரில் பெரும்பாலரது வாழ்க்கை முறை பற்றிச் சிறப்பித்துச் சொல்வதற்கில்லை. சைவ நீதியின் நாற்தூண்களான இறையன்பு, அறவாழ்வு, ஒழுக்க வாழ்வு, இரக்கம் ஆகியன வேகமாக அருகி வருகின்றன. மேற்கத்திய நாகரிகத்தின் ஊடுருவலால் உலகாயதமும் சுயநலமும் மேலோங்குகிறது. வாழ்வில் சில சகாயங்களைப் பெற உதவும் ஒரு கருவியாகவே இறைவனைக் கருதும்நிலை எங்கும் காணப்படுகின்றது. இறைவனின் சகாயத்தை இறையன்பு,அறவாழ்வு, ஒழுக்கநெறி, இரக்கம் ஆகியவற்றால் பெறுவதைவிடுத்து அவனின் சகாயத்தை சமயச் சடங்குகள் மூலமாக மட்டும்பெற்றுவிடலாம் - அதற்குப் பணமும் சில குருமாரும் இருந்தால் போதும்-என்ற நிலையில் எமது சமூகத்தில் பெரும் பான்மையோர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அறவழியில் பொருளைத் தேடாதும், ஒழுக்க நெறி வாழாதும் இறைவன் மீதும் அவனது குழந்தைகளாகிய உயிர்கள் மீதும் அன்பு செலுத்தாதும் பொருளை யீட்டி, அதன் ஒரு பகுதியை இறைவனுக்கு கொடுப்பது மூலம் தமது உலக விருப்பங்களை அடைந்து விடலாம் எனக்கருதுகின்றனர். சமயம் ஒரு வியாபாரப் பொருளாகிவிட்டது. இந்த நிலை மாறவேண்டும். சைவநீதியின் விழுமியங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அவர்கள் மனதில் பதியச் செய்யப்பட வேண்டும். அப்போது மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழியேற்படும். ●

# கட்டடத் திறப்பு விழா

(09ம் பக்கத் தொடர்ச்சி)

செலவு செய்தும் அரிதின் முயன்று இத்தர்ம கைங்கரியத்தை விரைவாகச் செய்து முடித்துள்ளனர். சைவ பரிபாலன சபையார் புண்ணியநாச்சி தரும நிதியிலிருந்து ஒருலட்ச ரூபா வரை ஒதுக்கியிருந்தனர். இலங்கை நாணயத்தில் சுமார் நாற்பது இலட்ச ரூபா செலவில் அமைந்த இப்புதிய கட்டடம் ஏறத்தாழ நாலாயிரம் சதுர அடி தளப்பரப்பை இரண்டு தளங்களில் கொண்டு சகல நவீன வசதிகளையும் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

தரைத்தளத்தில் செயலகம், பண்டகசாலை, சமையலறை ஆகியவற்றுடன் வருகையாளர் தங்கும் அறைகள் ஆறும் மடபராமரிப்பாளருக்கு இரண்டு அறைகள், சமையலறை, குளியலறை, கழியலறை கொண்டதோர் விடுதியும் அமைந்துள்ளது.

மேற்தளத்தில் வருகையாளர் தங்கும் அறைகள் ஆறும் நாற்பது அடி நீளமும் இருபது அடி அகலமும் கொண்ட சமய விழாக்கள் நடத்தக் கூடியவொரு விசாலமான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இன்னுமோர் தளம் அமைக்கக் கூடியவகையில் உறுதியான அத்திபாரமும் கொங்கிறீட் தூண்களும் அமைக்கப்பட்டுள்ளது.

பன்னிரண்டு வருகையாளர்கள் தங்கும் அறைகளுக்கும் செயலகத்துக்கும் வெவ்வேறாக குளியல், கழிப்பு அறைகள் இணைக்கப்பட்டுள்ளன. முழுத் தரைக்கும் சலவைக்கல் பதிக்கப்பட்டுள்ளது. மடத்துக்கு குழாய்க் கிணற்றிலிருந்தும் நகர் மன்ற நீர் விநியோகத் திட்டத்திலிருந்தும் தண்ணீர் கிடைக்கிறது.

இம்மடத்தில் அமைக்கப்பட்டுள்ள பன்னிரண்டு அறைகள் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் வாழும் சைவ அன்பர்கள் சிலரது உபயமாக அமைக்கப்பட்டதாக அறிகிறோம். அவை யாருடைய ஞாபகமாக அமைக்கப்பட்டன என்பது அந்தந்த அறை முகப்புகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த சைவ அன்பர்கள் - அவர்கள் இப்போ எந்நாட்டில் வாழ்ந்தாலும் - இம்மடத்தில் இலவசமாகத் தங்கிச் செல்லலாம். பத்து நாட்களுக்கு மேல் தங்குவதாயின் சபையின் முன் அனுமதி பெற்றுச் செல்லுதல் வேண்டும்.

இல28 மாலைகட்டித் தெருவில் அமைந்துள்ள புண்ணியநாச்சி அம்மை மடம், சிதம்பர சபாநாயகர் கோவில், சிதம்பரம் பேருந்து நிலையம் ஆகியவற்றுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.

சபாநாயகர் கோவிற் கீழரத வீதியிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று, கீழரத வீதி - தெற்குரத வீதிச் சந்தியைக் கடந்து நேராக (உமையாள் வீதி வழியாகச்) சென்றால், அது மாலைகட்டித் தெருவை அடையும். மாலைகட்டித் தெருவில் இடது பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றால் புண்ணியநாச்சியம்மை மடத்தைக் காணலாம்.

பேருந்து நிலையத்திலிருந்து மேற்கு நோக்கி வேணுகோபால் தெரு வழியாகச் சென்று தெற்கே நாராயணன் தெருவுக்குத் திரும்பிச் சென்றால் நாராயணன் தெரு - மாலைகட்டித் தெருச் சந்தியை அடையலாம். அச்சந்தியிலேயே புண்ணியநாச்சி அம்மை திருமடம் அமைந்துள்ளது.

சைவ உலகின் கேந்திர நிலையமான சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தவர்களுக்குச் சொந்தமான பல மடங்களில் ஒன்று இன்று மீளமைக்கப்பட்டிருப்பது மூலம் முக்கிய தேவையொன்று பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன் தமிழக ஈழ வரலாற்றுப் பதிவொன்று அழிந்து போகாது புது மெருகுபெற்று ஒளிர் வடையச் செய்யப்பட்டுள்ளது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சைவசமய பாடம் [5]

அன்புக் குழந்தைகளே,

கடந்த மூன்று மாத இதழ்களிலும் மாணவர் பகுதி பிரசுரமாகமுடியாது போனதையிட்டு மனம் வருந்துகிறேன். தரம் 11, தரம்13 வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களின் நன்மை கருதி, சைவபரிபாலன சபை நடத்தும் சைவநெறித் தேர்வின் வினாத்தாள்களில் அடங்கிய வினாக்களுக்கான மாதிரி விடைகளைப் பிரசுரிக்க வேண்டுமெனப் பல மாணவச் செல்வங்கள் கேட்டுக்கொண்டதால் அவற்றைப் பிரசுரித்திருந்தோம். அதனால் மாணவர் பகுதிக்கு இடமொதுக்க முடியாது போயிற்று.

சைவசமய பாடம் என்ற தொடரில் இந்துசாதனம் புத்தகம் 112 இதழ் 7,8,9,10 களில் முதல் மூன்று பாடங்களையும் இதுவரை பிரசுரித்திருந்தோம். சைவசமயம் என்ற தலைப்பிலான முதலாம் பாடத்தின் மூலம் சைவசமயத்தின் மாட்சி பற்றியும் அதன் பிரமாண நூல்கள் பற்றியும் நாம் சைவாபிமானம் உடையவர்களாக இருக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் அறிந்துகொண்டோம்.

கடவுளும் உயிரின் நிலையும் என்ற தலைப்பிலான இரண்டாம் பாடத்தில் கடவுள் பற்றியும் ஆன்மாக்கள் பற்றியும், ஆன்மாவோடு தொடர்புடையனவாகிய - ஆன்மாவை அடக்கித் தீய எண்ணங்களை எழுப்பி விடுவதாகிய - ஆணவம், அந்த ஆணவத்தால் ஆன்மா செய்யும் கன்மம், அந்தக் கன்மத்தைச் செய்வதற்குக் கருவியாயிருக்கின்ற சரீரம் ஆகியன பற்றியும் அறிந்து கொண்டோம். ஆணவம், கன்மம் சரீரம் ஆகிய மூன்றிலிருந்தும் ஆன்மா விலகினால் அது கடவுளோடு சேர்ந்து நிற்கும். அவ்வாறு விலகுவதற்குக் கடவுளை வழிபடவேண்டும், நல்லவர்களோடு கூடுதல் வேண்டும், நல்லவர்களுடைய சரித்திரங்களை வாசித்தல் வேண்டும், நல்லெண்ணம், நற்பேச்சு, நற்செய்கை ஆகியவற்றை வளர்த்தல் வேண்டும் எனக்கண்டோம்.

மனிதராக - அதற்கு மேலாகச் சைவசமயத்தவராக - பிறக்கும் வாய்ப்புக் கிடைத்த நாம் இப்பிறவியை ஆன்ம விடுதலையடையச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதை உணர்த்தினோம்.

நம்மைப் பீடித்திருக்கும் பாசங்களில் இருந்து விடுபட முயற்சி செய்யும் நாம், அவற்றின் தன்மையை நன்கு அறிந்து வைத்திருத்தல் வேண்டும். ஆகவே பாசங்கள் என்ற தலைப்பிலான மூன்றாவது பாடத்தில் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் பற்றி விரிவாக அறிந்து கொண்டோம்.

இவ்விதழில் மூன்றாம் பாடத்தின் இறுதிப் பகுதி பிரசுரமாகிறது. இதில், ஒருவன் செய்த கன்மத்தால் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள், அவனது முயற்சியால் ஏற்படும் அனுகூலங்கள், சோம்பியிராது முயற்சி செய்ய வேண்டியதன் அவசியம் ஆகியவையும் ஒருவனது கன்மத்தை அவனே அனுபவிக்கவேண்டும் - இன்னொருவர் மூலம் அனுபவிக்க முடியாது - என்ற உண்மையும் விளக்கப்படுகிறது. வாசித்துப் பயனடைக. அடுத்த இதழில் சந்திப்போம்.

– ஞானகுரு

**மூன்றாம் பாடம் (தொடர்ச்சி)**

## பாசங்கள்

***பிறவி எடுத்த ஆன்மா இன்ப துன்பங்களை அனுபவித்தற்கான நியதி ( விதி)***

சஞ்சித வினைத் தொகுதியிலிருந்து பிறவி ஒன்றில் பயனுக்கு வரும் வினையைப் பிராரப்தம் என அழைக்கிறோம். இது **நுகர்வினை** எனவும் ஊழ் அல்லது **ஊழ்வினை** எனவும் அழைக்கப்படுகிறது.

பிராரப்தத்தை அனுபவிப்பதற்கு ஏற்ற உடம்பை இறைவன் மாயையிலிருந்து படைத்தளிக்கிறான். பிராரப்தத்தை எந்த நேரத்தில் எவ்வாறு அனுபவிக்க வேண்டுமென்பதையும் இறைவனே நிர்ணயிக்கிறான்.

பிறவி எடுத்த நாம் முயற்சிகள் செய்ய வேண்டும். நாம் செய்யும் முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்கும். இன்னது செய்தால் இன்னது வருமென்பது விதி. நன்மை செய்தால் இன்பம் உண்டாகும். தீமை செய்தால் துன்பம் உண்டாகும். முயற்சி செய்தால் அதுக்குத் தக்க பலன் உண்டாகும்.இவை விதிகளாம். இந்த விதிகள் சிவபெருமானுடைய இச்சாசத்தியினாலே நிறைவேற்றப் படுகின்றன.

நாம் இப்பொழுது அனுபவிக்கும் இன்ப துன்பங்களின் ஒரு பகுதி ஊழின் பலன். மற்றொரு பகுதி நாம் இப்போது செய்யும் முயற்சியின் பலன். ஊழின் பலன் துன்பமாயிருந்தால், நாம் இப்போது செய்யும் நல்ல முயற்சியின் பலனை அது குறைக்கும். அதன் பலன் நல்லதாக இருந்தால், நாம் இப்போது அற்பமுயற்சி செய்தாலும் அதிக பலனைத் தரும். ஒருவன் முன்னே கடன்காரனாயிருந்தால், இப்போது அவன் பொருளைச் சம்பாதித்தாலும், செல்வனாயிருத்தல் இயலாது. ஏனென்றால், இப்போது சம்பாதிப்பதன் ஒரு பகுதி பழைய கடனுக்குப் போய்விடும். ''சம்பாத்தியம் கடனுக்குப் போகின்றதே! நான் செல்வனாயிருக்க முடியவில்லையே! நான் இப்பொழுது பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதனாற் பயனென்ன?'' என்று ஒருவன் சும்மா இருந்தால் இவனுடைய கடன் குறையாமல் எப்போதும் இவன் கடன்காரனாயே யிருப்பான். எவ்வளவு அதிகம் பொருள் சம்பாதிக்கிறானோ அவ்வளவு அதிகம் அவனுடைய கடன் குறையும். பின்னர் செல்வனாயும் வரலாம். அதுபோல, ஊழினால் வருந்துகிறவன் முயற்சி செய்யாமலிருந்தால், மிக அதிகம்

(15ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய பாடம் [5]

(14ம் பக்கத் தொடர்ச்சி)

வருந்துவான். முயற்சி செய்தால் அதற்குத் தக்கதாக வருத்தங்குறையும். ஆதலால், ஊழ் தன்னுடைய முயற்சியைச் செய்ய, நாம் நம்முடைய முயற்சியைச் செய்ய வேண்டும். ஊழ் தன்னுடைய பலனைத் தரும்; தற்கால முயற்சியும் தன்னுடைய பலனைத் தரும்; இதுவே விதி. நமக்கு இப்போது வரும் இன்ப துன்பங்களெல்லாம் ஊழினால் மாத்திரம் வருமென்பது விதியன்று. அநேகர் விதி இன்னதென்று விளங்காமல் முயற்சி செய்யாமல் வீணர்களாகி வருந்துகிறார்கள்.

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்பது வள்ளுவர் வாக்கு.

நமது இன்ப துன்பங்களுக்குக் காரணம் பிராரப்தமாயினும், அவ் வின்ப துன்பங்கள் சேரும் வழியால் இரண்டு வகைப்படும். பிராரப்தத் துக்குத்தக்கதாகக் கிடைத்த சரீரம் முதலிய கருவிகளைக் கொண்டு முயற்சியாற் பெறப்படுவன ஒரு வகை. ஏற்ற முயற்சியின்றிப் பெறப் படுவன மற்றொருவகை. இரண் டாவது ஊழ் எனப்படும்.

ஒருவன் செய்த கன்மத்தின் பலனை அவனே அனுபவித்தல் வேண்டும். எனக்காக வேறொருவர் கடவுளை வணங்குவதினால் எனக்குப் பலனில்லை. அந்தப் பலன் அவருக்குத் தான் உள்ளது. நான் ஒரு பாவம் செய்தேனென்று வைத்துக் கொள்வோம். அந்தப் பாவத்தினாலே எனக்கொரு கொடிய வியாதி வந்தது. வியாதியை நீக்குதற்காக வேறொரு ஆன்மா வைப்பலியிட்டு வருத்துவது பெரும் பயித்தியம். இது உடம்பிலே இருக்கிற அழுக்கை நீக்குதற்காக குளிக்கிறதற்கென்று குளத்துக்குப் போன ஒருவன், அங்கேயுள்ள சேற்றையள்ளிச் சரீரம் முழுவதும் பூசிக்கொண்டு வருவது போலாகும். வருத்தம் வந்தால், ஆடு வெட்டுவேன் என்று நேருவது இப்படியான ஒரு பைத்தியம். ஆடும் நம்மைப் போன்றதொரு ஆன்மா தானே. நாம் செய்த கர்மத்தின் பலனை அது ஏன் அனுபவிப் பதாகும். முன்னே செய்த பாவம் போதாமல் அந்த ஆட்டை வெட்டுகிற பாவத்தையுஞ் சேர்த்துக் கொள்வதுதான் இந்த மதியீனர் களுடைய செயல். •

## சைவ சமயப் பெருநாட்கள்

(வைகாசிப் பூரணை முதல் ஆனிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| வைகாசி | 12உ | (26.05.2002) | ஞாயிறு | பூரணை விரதம் |
| | 14உ | (28.05.2002) | செவ்வாய் | அக்கினிநாள் முடிவு |
| | 16உ | (30.05.2002) | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி |
| | 25உ | (08.06.2002) | சனி | சனிப்பிரதோஷம் |
| | 26உ | (09.06.2002) | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| | 27உ | (10.06.2002) | திங்கள் | அமாவாசை விரதம் |
| | 31உ | (14.06.2002) | வெள்ளி | சதுர்த்தி விரதம், சேக்கிழார் குருபூசை |
| ஆனி | 01உ | (15.06.2002) | சனி | ஆனி மாதப் பிறப்பு |
| | 02உ | (16.06.2002) | ஞாயிறு | ஷஷ்டி விரதம் |
| | 08உ | (22.06.2002) | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| | 10உ | (24.06.2002) | திங்கள் | பூரணை விரதம் |

# SAIVAISM

*(Continued from page 16)*

meant both the Father and Son, by the one term **Seyon**. Before him, Skanda Purana had already affirmed this truth, from the lips of Siva himself.

Furthermore, the Tamils are proud of their language like the French. Their passionate love can be gauged from the fact that is is claimed that in the first Academy ( Tamil Sangam), which existed centuries before the Christian era, their supreme God, Siva, was its President, and His son, Murukan, the tutelary god of the race, is mentioned as a member of that August body. Like the Indo - Aryans and the Chinese, the Tamils believed that their script and scriptures were revealed by God. That God is Sivam. In all languages, God and Good are synonimous. The pure Tamil word 'Sivam' means not only goodness and auspiciousness, but also Love and Light. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAIVAISM

## - Late Mr. K.Ramachandra,Editor: 'Religious Digest'-

(This Article is an abridged version of one of the eight discourses on Hinduism delivered by Late Mr.K. Ramachandra in Colombo in 1971 to Sixty four Roman Catholic Nuns. All the eight lectures were published in 1971 in England and Colombo under the title **Hinduism in a Nutshell** by Machandra Publications)

In the words of Rev. Dr. G.U. Pope, "Saiva Siddhanta Philosohpy is the choicest product of the Dravidian intellect." Another Church dignitary, Rev. Gowdie says: " judged by its intrinsic merits, the Saiva Siddhanta represents the high watermark of Indian thought and Indian life."

There was a time when indologists used to associate Siva with Rudra, the Vedic God, and bring down the history of Saivaism to a much later period. All these erroneous ideas are now given up for good, after the excavations of Mohenjo - Daro and Harappa of the Indus Valley Civilization. Sir John Marshall has left on record: " Among the many revelations that Mohenjo - Daro and Harappa had in store for us, none perhaps is more remarkable than the discovery that Saivaism has a history going back to the chalcolithic age or perhaps even further still, and thus it takes its place as the most ancient living faith in the world."

According to the Sanskrit work,Thedjanakailasa Manmiyam, when Saiva worship was universal during the pre - Vedic period, there were 1008 Sivan temples in the region north of Himalayas, 1008 Temples between Himalayas and Cape Comorin, and a third group of 1008 temples in old Lanka, of which the present Ceylon is only a small portion. That this is not a poetic exaggeration, but a definite historical fact is proved by the discovery in recent times of many of the sites of the Jyoitirlinga Shrines in India, like Somanath and Amaranath, and of two ancient and famous Sivan temples in Ceylon, Ketheeswaram and Koneshwaram, which are reputed to have been in existence during Ravana's reign in old Lanka, and which were renovated and rebuilt by the Chola kings in the 11th century. It should be mentioned here that not only Ravana, his parents and his wife, and her parents, but Rama and Krishna, the two great Avatars of Vishnu, were Siva worshippers.

In describing his pilgrimage to the Siva shrine of Amaranath in Kashmir, Dr. Joshua Duke says: "It is the trip to make. I shall never foget it. One felt one was in the presence of the Maker of the Universe". This is exactly how the ancient Tamils, at the dawn of civilization, felt when they stood before the majesty of snow-capped mountain peaks, which naturally became their first objects of worship. Of the sixty four manifestations of God Siva described in the scriptures, Lingam and Lingotpavam come first in order, and this is associated with Arunachala (Red Hill) which is one of the oldest and most sacred of all India's holy places, and which became world famous in the 20th century, after Bhagawan Sri Ramana Maharshi sat there for 54 years ( 1896 to 1950) shedding spiritual lustre of a unique kind by his teachings through silence, thus reminding us of God Siva's manifestation as Dakshinamurthy, the Silent Teacher. Arunachala is also a Jyotirlinga Shrine like Kailas, Kedar, Pasupathinath ( in Nepal), Amaranath, Somanath, Mallikarjuna, ( birth place of Sage Risyasringa, who performed the Putrakamesti Yajna for King Dasaratha, father of Rama), Tryambakeswara, Ujjain and Kasi. Kasi stands supreme like Arunachala as a Jyotirlinga Kshetra. Skanda Purana says that the Supreme God, Siva, the indescribable light shines ( Kas - means 'to shine'). As it is situated between the two rivers Varana and Asi, it is called Varanasi.

Let us have a peep into the old Tamil Classics. In the same way as the Sumerian cities had a separate God for each one of them, the ancient Tamils too had their regional deities assigned to the natural divisions of their land, from the hill country to the sea - coast, ranging through jungle, pastoral land, and fields. Four such deities are mentioned in Tholkappiyam, the most ancient Tamil book available. Of these, **Mayon**, the dark-coloured, (Vishnu) and **Seyon**, the red-coloured (Siva) belong to the indigenous spiritual culture of the ancient Tamils, while the other two , Indra and Varuna, are, without doubt, the Vedic Gods of the Aryans. There is a controversy about god **Seyon**. Some interpret it to mean Siva, and others say that it refers to His son, Murukan. As every one of the Saivaites is a Muruka devotee from very ancient times to the present, it is safe to conclude that Tholkappiyanar

***(Continued to page 15)***

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K.K.S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna 26.05.2002 (Fullmoon Day).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org